ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ் (தனிச்சுற்று)

# இளந்தூது

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்

ஒருங்கிணைப்பாளர் : **முனைவர் த. செபஸ்தி ஜான் பாஸ்கர்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

## 34 ஆம் ஆண்டு ஆசிரியர் குழு

ஆசிரியர் : **ர. நிரஞ்சனா** இளம் நுண்ணுயிரியல் (நிறை)
இணை ஆசிரியர்கள் : **கு. ஹேராம்** இளம் இயற்பியல் (நிறை)
**க. வர்ஷா** இளம் கணிவியல் (நிறை)
துணை ஆசிரியர்கள் : **ச. தனலெட்சுமி** இளம் உயிர் தொழில்நுட்பவியல் (நிறை)
**ப. அபிராமி** இளம் கணிதவியல் (நிறை)
ஆய்வாளர்கள் : **வே. நந்தகுமார்** இளம் கணிதவியல் (நிறை)
**பி. ஷர்மிளா** இளம் நுண்ணியிரியல் (நிறை)
சிறப்பு உறுப்பினர்கள் : **ரா. நித்திஷ்** இளம் இயற்பியல் (நிறை)
: **மு. பிரீத்தி** இளம் கணிதவியல் (நிறை)
: **கா. சுபிக்ஷா** இளம் உயிரிதொழில் நுட்பவியல் (நிறை)
: **சி. பூஜாராயர்** இளம் கணிதவியல் (நிறை)
சிறப்பு ஆலோசகர் : **வெ. காயத்ரி** முதுகலை வேதியியல் (நிறை)
வரை கலைஞர் : **நித்தியதர்ஷினி** இளம் கணினி பயண்பாட்டியல் (முதல்)

## உறுப்பினர்கள்

**செ. இனியாஸ்**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)
**ம. விக்னேஷ்**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)
**ந. ஹரிஹரன்**
இளம் கணினி அறிவியல் (இடை)
**ம. அருண்குமார்**
இளம் கணினி அறிவியல் (இடை)
**கு. தினேஷ்**
இளம் பொருளியல் (இடை)
**ரா. அபிராமி**
இளம் வேதியியல் (இடை)
**இரா. சந்தியா**
இளம் இயற்பியல் (இடை)

ஆசிரியர் இளந்தூது,
மாணவர் இதழ் (தனிச்சுற்று),
அ.வ.அ.கல்லூரி (தன்னாட்சி),
மன்னம்பந்தல்,
மயிலாடுதுறை - 609 305.

**Youtube:** இளந்தூது,
**Instagram:** ilanthoothu_student_magazine
**Website:**
https://site.google.com/view/illanthoodhu
**Blogger:**
www.ilanthoodhumagazine.blogspot.com

தங்கள் படைப்புகளைத் திருத்தவும், சுருக்கவும், ஆசிரியர் குழுவுக்கு உரிமை உண்டு,
தங்கள் படைப்புகளை illanthoodhu32@gmail.com




## உள்ளுரை


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | | |


பயிரும் மலர்ந்தால் தான் பலனைத் தரும்; அறிவும் வளர்ந்தால் தான் உயர்வைத்தரும்.

ஓடு இல்லையேல் நட, நட இல்லையேல், தவழ்ந்தாவது செல்
ஆனால் நகருவதை மட்டும் நிறுத்திவிடாதே!





**Knowloge is a Powerful Weapon. Arm Yourself With it.**

**எம். ஆகாஷ்**
இளம் (நிறை)

அந்த செய்தியை கேட்டு சம்பவ இடத்திற்கு செழியன் செல்வதற்கு முன் கண்ணனின் தலை துண்டிக்கப்பட்டு கிடந்தது. எந்த மண்ணில் பாரதியின் ரத்தம்பட்டு கலங்கம் அடைந்து இருந்ததோ அதே மண்ணில் கண்ணனின் ரத்தம்பட்டு தூய்மை ஆனது.

உண்மை தெரிந்த காவல்துறை செழியனோ, பாரதியின் தந்தை மீதோ, ஊர் மக்கள் மீதோ கோவப்படவில்லை. அவரே எந்தவித சந்தேகமும் வெளி உலகில் எழாதவாறு கண்ணனின் சடலத்தை அழித்தார். வெளி உலகிற்கு, குற்றவாளி கண்ணனை காணவில்லை தீவரமாக தேடி வருகிறோம் என்று பேட்டி கொடுத்தார் செழியன். என்ன தான் காலம் மாரினாலும் பாரதியின் மனதில் இருந்து அந்த துற்சம்பவத்தின் நினைவுகள், அவள் வாமும் நாட்களை நரகம் ஆக்கியது. வாய்பேச முடியாத அந்த ஊமையின் அலரல் சத்தம் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

**இரா. ஹரிபிரசாத்**
இளம் (முதல்)



## மறக்கப்பட்டவன் (Or) மறைக்கப்பட்டவன்

பிறந்தது குற்றம்...
பெற்றவளை குற்றம் சொல்வதா?
பிறந்த சமூகத்தை குற்றம் சொல்வதா?
இன்பம் சூழும் வயதில் இகழ்ச்சிகள்
மட்டும் கொண்டேன்...
இயல்பாய் கிடைக்கும் கல்வியும்
பல இன்னல் மத்தியில் கொண்டேன்...

ஏற்றதாழ்வெனும் சொல்லில்
எமக்கு ஏற்றம் மட்டும் இல்லை...
தாகம் தீர்க்கும் தண்ணீரும் என்
தாழ்வை பார்த்து ஒதுக்கியது

என் வாழ்க்கையும் கூட
என்னிடம் வாழ மறுத்தது
விலங்காய் பிறந்திருநதால் வாழ
விட்டிருப்பார்களோ என்னவோ...
தவறி மனிதனாய் பிறந்துவிட்டேன்
மடியும் வரை ஒதுக்கினார்கள்

சாதி என்ற வார்த்தையால் சதி
செய்யும் விரோதிகளை சாட்டை
கொண்டு அடக்க சாகும் வரை கற்றேன்
வேசித்தனம்புரியும் விரோதிகளை அழிக்க
கல்வி எனும் விதை கொண்டு
வெகுண்டெழுந்த நெஞ்சத்தோடு விடியும்வரை கற்றேன்...

சமூகம் சரிசெய்யும் செய்தி கேட்டு
சட்டமும் என்னோடு வந்து போராடியது...
உயிர் வாழ தகுதி இல்லை என்றோர் முன்
உலகம் முழுதும் சென்றேன்...

முடியாது என்பதும், நடவாது என்பதும் முடமான வர்த்தைகள்.

எட்டி உதைத்தவர்கள் கண்முன்
எழுதிய ஒற்றைபுத்தகம் ஏந்தி நடந்தேன்...
என்னை போல் ஏமார்ந்திருந்த எல்லா சமூகமும்
ஏட்டை எடுத்து நடக்க...

அனைவருக்கும் கல்வி கிடைக்கும்
என மனநிறைவோடும்
சமூகத்தை சரி செய்து விட்டேன்
என சந்தோஷத்தோடும்
சாதிகள் இல்லா உலகம் உருவாகும்
என மகிழ்வோடும்

சாதி பார்க்காமல் சாவையும் கூட, சற்று
நெருக்க கட்ட அணைத்தேன்
சாதி மதம் காணாமல்...
சாவிற்கும் பிடித்ததாலோ என்னவோ,
என்னையும் கூடவே அழைத்து சென்றது
மரணமும் என்னை

அழைத்துச் சென்றதன் காரணம் இப்போழுதுதான் புரிகிறது...
என் கனவுகள் சீரழிந்த இநத
சமூகத்தை கண்டு தினம் தினம்
மரணிப்பதை விட, கனவுகள் நிறைவேறியது
என்ற கனவோடு மரணிப்பது மேல் என்பதை...

**செ. இனியாஸ்**
இயற்பியல் (நிறை)



சொன்னார். இருவரும் கலந்து பேசி ஒரு திட்டம் தீட்டினர்.

ஊரில் உள்ள அனைவரும் ரத்த பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு அறிய நோய் பரவி வருகிறதாம், அது எவ்வித அறிகுறியும் இன்றி உடலில் பறவி ஒருசில மாதங்களில் உயிரே போக வாய்ப்பு உள்ளதால், உடனடியாக நம் ஊர் மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்து பார்த்துக் கொள்ளுங்கள் என்று காவல்துறையின் மூலம் ஊர் முழுவதும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் புதிய நோய் என்று எதுவும் இல்லை குற்றவாளியை கண்டுபிடிக்க மருத்துவரும், காவல்துறை செழியனும் தீட்டிய திட்டம் இதுவே. இதன் மூலம் DNA வைத்து, பாரதியின் மருத்துவ அறிக்கையில் உள்ள DNA யாரிடம் ஒத்துபோகிறதோ அவரே குற்றவாளி. இது அவர்கள் எதிர்பார்த்ததை விட மிகவும் கடினமாக இருந்தது ஒன்றைரன்றாக வைத்து தேர்வு செய்து பார்த்தனர். அதில் கருணாகரனின் DNA ஒத்துப்போகவில்லை. ஊர்மக்களின் யாருடைய DNA வும் ஒத்துப்போகவில்லை இது வீண் என்று நினைத்து கைவிட்டனர். அந்த நேரம் பார்த்து ஆசிரியர் கண்ணன் எனக்கு ரத்த பரிசோதனை எடுக்க வேண்டும் என்று சொன்னார். பிறகு, காவல்துறை கண்டு பாரதியின் வழக்கில் ஏதேனும் தடையம் கிடைத்ததா என்று சோகத்துடன் கேட்டார். இன்னும் சில நாட்களில் கண்டுபிடித்துவிடுவேன் என்று சொன்னார் செழியன். பிறகு, அவர் போனபின் அவரது DNA வையும் ஒப்பிட்டு பார்த்தனர் இறுதியில் இவரது DNA ஒத்துப் போனது.

காவல்துறை ரமேஷ் சட்டரீதியாக வழக்கை மேற்கொள்ள விரும்பினார். ஆனால், மருத்துவர் பாரதி அப்பாவிடம் உடனே போய் சொல்லிவிட்டார். ஆசிரியராக இருந்து கொண்டு இந்த கொடூர செயலை செய்து இருப்பார் என் அவரால் நினைத்து கூட பார்க்க முடியவில்லை, ஆசிரிய பணிக்கே அழியாத கலங்கம் ஏற்படுத்திவிட்டார் இவரெல்லாம் ஆசிரியரும் இல்லை, மனிதனும் இல்லை மிருகம் என்று ஒப்பிடுவதும் குற்றமே. ஆத்திரம் அடங்காத தந்தை வீட்டில் இருந்த வீச்சறுவாவை எடுத்துக் கொண்டு அவனை வெட்டிவீழ்த்த ஆவேசமாக சென்றார் அவருடன் சேர்ந்து ஊர்மக்களும் சென்றனர். அனைவராலும் அடித்து மிதித்து ஒடுக்கப்பட்டார்.

விடும் அதை வைத்து குற்றவாளியை எளிதாக கண்டுபிடித்துவிடலாம் கவலைபடாதீர்கள்” என்றார். குற்றவாளியை கண்டுபிடிக்கும் வரை ஓயமாட்டேன் என்று வாக்கு கொடுத்துவிட்டு வேகமாக சென்றார் காவல்துறை செழியன்.

விசாரனையை உடனே துடங்கினார், சுப்ரமணியிடம் இருந்து ஆரம்பித்தார். அவன் அழுதுக் கொண்டே எனக்கு எதுவும் தெரியாது. நான் அன்று பள்ளிக்கு செல்லவில்லை சென்றிருந்தால் இச்சம்பவம் நடந்து இருக்காது என்று சொல்லிவிட்டு மீண்டும் அழுக தொடங்கினான். உனக்கு யார்மேலாவது சந்தேகம் இருக்கா என்று கேட்டார் செழியன். தேம்பிக்கொண்டே நம் ஊர் தலைவரின் மகன் கருணாகரன் மீது தான் சந்தேகமாக உள்ளது என்றான். அவ்வாறு அவன் கூறியும் காவல்துறைக்கு சுப்ரமணி மீது சந்தேகம் இருந்தது ஏன்னென்றால், அன்று அவன் பள்ளிக்கு செல்லவில்லை.

அடுத்த விசாரனை ஆசிரியர் கண்ணனிடம், அவரும் சுப்ரமணியும் சொல்லிவைத்தார்போல் கருணாவையே சொன்னார். அன்று பள்ளிக்கு வந்த கருணாவும் அவனது நண்பர்களும் சிறப்பு வகுப்பிற்கு வரவில்லை என்று கூறினார்.

அடுத்த விசாரனை கருணாகரனிடம், “அன்று நானும் என் நண்பர்களும் சிறப்பு வகுப்பில் இருந்து தப்பியது உண்மைதான் ஆனால் நாங்கள் அந்த பாவத்தை செய்யவில்லை, அன்று நாங்கள் யாருக்கும் தெரியாமல் திரையரங்குக்கு சென்று மாலை காட்சி பார்த்துவந்தோம்” என்றான்.

மருத்துவரின் மேற்பார்வையில் நன்கு தேரி வந்தால் பாரதி. ஆனால் முழுமையாக குணமடையவில்லை திடீர் என்று ஏதோ நினைவுக்கு வருவது போல் ஆ.... ஓ... என்று அலரி அழுவாள். தாயார் ஆறுதல் சைகை மூலம் சொல்லி வந்தார். பெறும் மணஉலச்சலுக்கு ஆல்லானார்.

காவல்துறை, கருணா சொன்னது உண்மையா என்று உறுதிசெய்ய அத்திரை அறங்கின் கண் காணிப்பு புகைபட கருவியை பார்த்து தெரிந்துகொண்டார். அந்த நேரத்தில் அவர்கள் திரையரங்கில் இருந்தது உண்மையே! மருத்துவர் அவரது கைபேசி மூலம் காவல்துறைக்கு தொடர்பு கொண்ட பாரதியின் மருத்துவ அறிக்கை வந்துவிட்டது என்று



## வலியன் விழிகள் (வெளிநாட்டு பயணம்)

தாயின் அன்பான அறிவுரையும்
தகப்பனின் தன்னமபிக்கை தரும் பேச்சும்
அனபுமகளின் அழுகை குரலும்
கண்ணீா் மல்கிட மனைவியிடம் கொடுக்கும்
வாக்கும்
தோள் கொடுக்கும் தோழனின் துணையில்லா
முதல் பயணம்
பிரயாத பிறந்த பூமியை வட்டு
அறியாத அயல் நாட்டிற்கு செல்லும்
ஆண்களின் தியாகத்திற்கு
ஈடுக்கொடுக்கும் வலி வேறுண்டோ
இவ்வுலகில்

**இ. சுபிக்ஷா**
இளம் வேதியியல் (இடை)

## நினைவுகள்

நீ உயிரோடு இல்லை என்றாலும் உன்
நினைவுகள் என் உயிரில் இருக்கிறது
அது எப்போதும் என்னை கொல்லாமல்
கொல்கிறது உனக்கு அழிவு உண்டு
உன் நினைவுகளுக்கு அழிவு இல்லை

## மழை

மேகம்
கருணை பகவான்
மழை துளிகள்
தங்க காசுகள்
பூமி
பிச்சைபாத்திரம்

**ப. வைரலட்சுமி**
இளம் (நிறை)

# ஆடையின் முக்கியதுவம்

**(இலை இல்லாத மரமும் இல்லை ஆடை இல்லாத மனிதனும் இல்லை)**

முன்னுரை
ஆடையின் பொருள்
வரலாறு
ஆடையின் பயன்பாடு
தத்துவம்
வகைகள்
முடிவுரை

**முன்னுரை** :

வாழ்க்கையில் எல்லோருக்கும் அவசியமான மூன்று தேவைகள் உணவு, **உடை,** இருப்பிடம். இக்கட்டுரையல் உடை பற்றிய பொருள், வரலாறு, பயன்பாடு, தத்துவம் மற்றும் வகைகளைக் காணலாம்.

**ஆடையின் பொருள்** :

மனிதன் உடலுக்கு மேல் அதனை **மூடுவதற்கு** அணிவது தான் உடை என்று சொல்வார்கள். உடை மனிதனுக்கே கிடைத்த **தனிசிறப்பு,** அழகிய வரம், உறங்கும் இடத்தில் கூட பாதுகாப்பு தருகிறது.

உடை என்றால் **உடுக்கப்படுவது** என்று பொருள்.

**வேறு பெயர்கள்** :

உடையின் வேறுபெயர்கள் ஆடை, உடை, காழகம், பட்டு, கவசம் என்று **தமிழ்நாட்டில்** கூறும் வேறு பெயர்கள்.

**வரலாறு** :

உடையின் தோற்றம் அறிந்து கொள்வது கடினம் ஏறத்தாழ 1,07,000 ஆண்டு முன் ஆடை தோன்றி இருக்க கூறும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றன. தொல்பொருள் **ஆராய்ச்சியாளர்கள்** ஆடை பற்றிய ஆராய்ச்சி வெளியிட்டு உள்ளனர். கால வெப்ப நிலை தான் **உடை** தேடுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. அதிலும் **பணிகாலம்** முக்கிய காரணமாகத் தோன்றியது. உடை என்பது **இயற்கை** இடத்தில் தான் கிடைக்கப்பெற்றது.



அப்போது தான் அவருக்கு நினைவு வந்தது போழும், இன்னும் வீட்டுக்கு வரவில்லையா என்று ஆச்சரியத்துடன் கேட்டார், உடனே பள்ளிக்கு சென்று பார்த்தார் பாரதியை காணவில்லை. பிறகு பாரதி வீட்டிற்கு சென்றார். நடந்ததை சொன்னார். பின் அனைவரும் சுப்ரமணி வீட்டிற்கு சென்று பார்த்தனர் அவனும் அதிர்ச்சி அடைந்தான்.

நேரம் 10.30 விசயம் காட்டு தீப்போல் பறவியது. ஊரே பாரதியை தேடியது. இரவு முழுவதும் தேடியும் பாரதியை கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு, காவல்துறையிடம் புகார் அளித்தனர்.

அதிகாலை 5 மணி, தோட்டகாரர் மாகண்ணுகளுக்கு நீர் பாச்ச வந்தார். அந்த அவல காட்சியை கண்டு ஆ...ஆ... என்று அலரினார், அவர் அலரியதில் ஊர் கூடியது. ஒட்டு துணியின்றி ரத்த வெள்ளதில் உடல் சிதைக்கப்பட்டு கோர நிலையில் காணப்பட்டால் பாரதி. பெற்றோர் பார்பதற்கு முன், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். அப்பொழுது மருத்துவமனைக்குல் அளவுக்கு மிஞ்சி ஊர் மக்கள் சூழ்ந்திருந்தனர்.

செவிழியர்கள் அவர்களை வெளியேற்ற முயற்சி செய்தனர். காவல்துறைவந்த பின்பு ஊர் மக்களை வெளியேற்றினர். பாரதி இறந்துவிட்டாள் என்ற பேச்சு பறவியது.

பெற்றோரை மட்டும் உள்ளே செல்ல அனுமதித்தனர். அவர்கள் தன் மகள் இருக்கும் அறையை நோக்கி விரைந்து ஓடினர். அறைக்குல் நுழைந்ததும் தாய் ஓ... என்று ஓலமிட்டாள், தந்தை மணமுடைந்து, கால்கள் வழுவிழந்து கீழே விழுந்தார். மருத்துவர் ஆறுதல் கூரி தனி அறைக்கு அழைத்து சென்றார். காவல்துறை செழியன் உடன் வந்தார். உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என்று சொன்னார் மருத்துவர். பிறகு, தெரியவந்தது பாரதி இறந்து விட்டால் என்ற செய்தி வதந்தி என்று. எந்த பெண்ணுக்கும் நடக்ககூடாத அவலம் நடந்துவிட்டது என்று சொல்லி வருத்தப்பட்டார் மருத்துவர். செழியன் கண்கலில் கண்ணீர் பொங்கிவழிந்தது காவல்துறையாக இருந்தாலும் அவரும் ஒரு மனிதர் தானே.

செழியன் சொன்னார், “எனக்கும் ஒரு பெண் குழந்தை இருக்கிறது உங்கள் வலியை என்னால் உணரமுடிகிறது” என்றார். மருத்துவர் சொன்னார், “பாரதியின் உடலில் இருந்து சில ஆதாரங்கள் எடுத்துல்லேன் அதை ஆய்வுக்கு அனுப்பியிருக்கிறேன் 2 நாட்களில் அறிக்கை வந்து

பிடிக்காது. பல சண்டைகள் இவர்கள் மத்தியில் நடந்து வந்தது. அறிவியல் ஆசிரியர் தான் சமாதனம் செய்து வைப்பார். அதனால், பாரதிக்கு ஆசிரியர் கண்ணனை பிடிக்கும்.

பாரதி எப்போதும் அறிவியலில் 95 மதிப்பெண் குறையாமல் எடுப்பால். பொது தேர்விற்கான நாள் நெருங்கிவந்தது. பள்ளியில் சிறப்பு வகுப்புகள் நடைபெற்று வந்தன வகுப்பு முடிய இரவு 8 மணி ஆகும். பாரதி வீட்டில் இருந்து பள்ளிக்கு செல்லும் வழியில் ஒரு பெரிய தோப்பை கடந்து செல்ல வேண்டும். அந்த சாலையின் தெருவிளக்குகள் சரியாக எரியாது. அதனால் எப்போதும் பாரதியும் சுப்ரமணியும் சேர்ந்து செல்வார்கள்.

ஒருநாள் சுப்ரமணிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பள்ளிக்கு வரவில்லை. அன்று பாரதி ஆசிரியரிடம் இன்று ஒரு நாள் மட்டும் நான் பொழுது சாய்வதற்குள் வீடு திரும்ப வேண்டும். சுப்ரமணி இன்று வரவில்லை நான் தனியாக போக வேண்டும் என்று எடுத்து கூறினால். ஆனால் ஆசிரியர் பொது தேர்வுக்கு நாள் இல்லை என சொல்லி போககூடாது என்று மறுத்து விட்டார். பிறகு நான் வந்து விடுகிறேன் என்று ஆறுதல் கூறினார்.

அன்று 12 ஆம் படிக்கும் மாணவன் கருணாவும் அவனது நண்பர்களும் சிறப்பு வகுப்பிற்கு வராமல் தப்பித்து பள்ளியை விட்டு ஓடினர். அவன் ஊர் தலைவரின் மகன் என்பதால் யாராலும் அவனை கண்டிக்க முடியவில்லை. அன்று சிறப்பு வகுப்பு முடிந்த பின் ஆசிரியர் இதோ வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு போனவர் அறை மணி நேரத்திற்கு பிறகும் காணவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் அச்சத்துடன் வீட்டை நோக்கி நடந்து சென்றால் பாரதி.

பாரதிக்கு யாரோ பின் தொடர்வது போல் தோன்றியது, வேகமாக நடக்க தொடங்கினால், கண் இமைக்கும் நொடியில் “டமால்” என்று பெறும் ஒளி கேட்டது. தலையில் தாக்கப்பட்டு மயங்கி விழுந்தாள் பாரதி. அவளுக்கு நினைவு திரும்பும்போது பல சித்திரவதைகளை அனுபவித்து கொண்டு இருந்தால். ஆனால் அவளால் எதையும் பார்க்க முடியவில்லை கண்கள் கட்டபட்ட நிலையில் இருந்தாள். சிறிது நேரத்திற்கு பிறகு மீண்டும் பல சித்திரவதையை அனுபவித்தாள். ரத்தம் பூமியை நினைத்தது.

நேரம் 10 மணி ஆகியும் வீடு திரும்பாத காரணத்தினால் பெற்றோர் ஆசிரியருக்கு கைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு பார்த்தனர்.



முதல் முதலில் **வேட்டையாடின** விலங்கு தோல்களில் இருந்து தான் தங்கள் உடையை தேர்ந்தெடுத்தனர். அதன்பின் இலைகள் வைத்து செய்தனர். 30,000 ஆண்டுக்கு முன் விலங்கு எலும்பு தான் ஊசி தயாரிக்க பயன்பட்டது.

**ஆடையின் பயன்பாடு** :

உடை உடலை வெளச்சூழல் இருந்து பாதுகாக்க மற்றும் வெளி மாசு, காலநிலை (குளிர், வெயில், மழை) இருந்து பாதுகாக்கிறது. பூச்சிகள் மற்றும் எந்த வித கிருமியும் நம்மை அடையாத அளவு பாதுகாக்கிறது.

**ஆடையின் வகைகள்** :

பருத்தி துணிகள் (Cotton) சீக்கிரமாக கசங்கிவிடும், சுருக்கம் வந்துவிடும் பட்டு (Silk) துணிகள் மென்மையான தன்மையை உடையது. கம்பளி துணி இதை மிகவும் **குளிர்** பகுதியில் பயன்படுத்துவார்கள். பாலியஸ்டர் மற்றும் ரேயான் இவ்வகை துணி பளபள என்றும் மிகவும் மென்மையாகவும் இருக்கும். **நைலான்** இவ்வகை துணி வளுவளுப்பாகவும், ஒளியை பிரிதிபலிக்கும் வகையில் அமர்ந்திருக்கும்.

**தத்துவங்கள்** :

“ஆள்பாதி ஆடைபாதி” நாம் யார் என்பதை நம் **உடையே** தீர்மானித்துவிடும். நம் வெளிதோற்றத்தை கொண்டு நம்மை கணக்கிடுவார்கள்.

*உடுக்கை இழந்தவன் கைபோலே ஆங்கே*
*இடுக்கண் கலைவதாம் நட்பு.*

இத்திருக்குறளில் **திருவள்ளுவர்** நழுவிய ஆடையை உடனே சரிப்பார்ப்பதை மிகவும் அழகாக நட்போடு ஒப்பிட்டு கூறியுள்ளார்.

**முடிவுரை** :

“பல உறுப்புகளால் ஆனது உடல்
அந்த உடலை பாதுகாக்க **உடுப்பது** தான் உடை.”

நம்மை பாதுகாக்க நம் உள் இருப்பதே தான் ஆடை என்று சொல்லலாம்.

**எஸ். கிருஷ்ணவேனி**
இளம் (முதல்)

# இயற்கையும் நானும்

வானம் பொன் முறுவல் இட
கருமேகம் சிறு துளிகலாய் விழ
பூமியோ புது புத்துணர்வு பெற்று
நிதம் வாசனை வீசியதே
என் மனம் எங்கும் பல எண்ணங்கள்
தோன்றியதே....
கடல்கள் அலையை தினம் அனுப்ப
கரைகள் நுரையை பிடித்திழுக்க
மாலை செந்-ஒளியோ என் மனதின் உள்
நுழைந்து கலை வண்ணமிட
என் கவலைகள் கரையில் கரைந்து பறந்துவிட
தனிமையில் ஓரிடம் இசையாய் – ஓர் ராகம்
இருந்தால் என் வாழ்வே சொர்க்கமே
காற்றில் ஒரு சுவை எனக்குள் ஓர் போதை
கிடைத்தால் மயங்கும் என் இதயமே...
சாலையில் நடந்து செல்ல
சருகுகள் பறந்து மெல்ல
என் மீது விழுகையில் சிலுக்கின்றதே
நிலவொளியில் வானும் மின்ன
விண்மீன் நானும் என்ன
மனதுக்குள் பட்டாம்பூச்சி துடிக்கின்றதே
பயணம் யாருக்கும் முடிவதில்லை
அது முடிந்தால் உலகில் இருப்பதில்லை
பறவை பறக்க மறப்பதில்லை
நானும் சிரிப்பை நிறுத்தவில்லை
வானவில் காட்டும் நிறம் தானே
காணும் கண்களோ வரம் தானே
உலகினில் வாழும் சுகம் ஒரு முறை மட்டும் தானே....

**எஸ். ஜெயசூரியா**
இளம் உயிர் தொழில் நுட்பவியல் (நிறை)

கல்வியும், அனுபவமும் கல்லறையில் மட்டும் முடிவாகும்.




# அவள் அலரும் சத்தம்

தை மாதம், தாய்மாமனை கைபிடித்த மங்கை, ஆம் திருமணம், தம்பதியினர் தங்களது இல்லர வாழ்க்கையை காதலுடன் கலந்து இன்பமாய் வாழ்ந்துவந்தனர். நாட்கள் கடந்து மாதம் ஆகின, மாதம் கடந்து வருடம் ஆகின, ஆனால் காதல் துளி அளவும் குறையவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, அத்தம்பதியினர்களுக்கு ஒரு மகாலெட்சுமி பிறந்தால். தெய்வீக முகம், சென்நிறம், பொன் புன்னகையுடன் காணப்பட்டால். அவளுக்கு, தமிழ்பற்றுமிக்க, வீரம் கொண்ட மகாகவியின் பெயரை வைத்தனர் "பாரதி". இருவர், மூவர் ஆகின. காதல் மேலும் பெருகியது.

பாரதிக்கு மூன்று வயது ஆனது ஆனால் மழலை மாறவில்லை, கூப்பிட்டால் திரும்பவில்லை, அச்சம் கொண்ட பெற்றோர் தேர்வு செய்து பார்த்தனர். பாரதி ஆழ்ந்து தூங்கும் போது, பெரும் ஒலி எழுப்பினர், ஆனால் அவள் எழவில்லை. பின்னர், விழித்து இருக்கும்போது தலைக்கு பின்னால் சத்தமாக தைட்டினால் அம்மா, சிரிதும் உணர்ச்சியின்றி முன் சென்றாள் பாரதி ஆம், அவளுக்கு பிரவியிலேயே காதுகேளான்மையும், வாய் பேச முடியாமலும் இருந்தது. அதை தாங்க முடியாத தாய் கதரி அழுதாள், மயங்கி விழுந்தாள் அவளது கனவும் சேர்ந்து விழுந்தது.

பாரதிக்கு ஐந்து வயது ஆனது, மற்றபிள்ளைகளை போல் தானும் பள்ளிக் செல்லவிரும்பினால். அவளது ஆசையை பெற்றோர் நிறைவேற்றிவைத்தனர். பத்து ஆண்டுகளுக்கு பிறகு, பாரதி பத்தாம் வகுப்பு படித்து வந்தாள். அவளது ஆருயிர் நண்பனின் பெயர் சுப்ரமணி. பாரதி காதுகேளாதவர் என்று யாராலும் சொல்ல முடியாது ஏன்னென்றால், பிறர் பேசும் வாய் அசைவை பார்த்தே பதில் சைகை மூலமாகவோ அல்லது எழுதியோ தெரிவிப்பாள். அவளிடம் எழுதுகோலும் காகிதமும் இருக்கும். சுப்ரமணியிடம் மட்டும் இவள் கண் அசைவினாலே பேசிகொள்வாள் அது அவனுக்கும் புரியும். அது அவர்களுக்கு மட்டும் புரிந்த ரகசிய மொழி ஆகும். 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவனின் பெயர் கருணாகரன். அவன் அந்த ஊர் தலைவரின் மகன். அவனும் அவனது நண்பர்களும் பாரதியை கேலி செய்து வந்தனர். சுப்ரமணிக்கு அவர்களை கண்டாலே




**ப. வைரலெட்சுமி,** இளம் (முதல்)



## பெண்ணின் மௌனம்

சமூகத்தின் உளறல்களுக்கு
காற்றில் ஆடும் நாணலை போல
தலை அசைத்து
ஏக்கங்களை கண்ணீர் துளிகளாய்
பொழியவிட்டு
கனவுகளை கானலாய் மாற்றி
கடமைகளை கனவாய் சுமந்து
வெளிக்கொனற முடியாத நிசப்தம்
மழலையின் மொழி கூட
புரிந்து விடும் போலும்
ஒரு பெண்ணின் மௌனம் அறிய
ஆண் படும் பாடு
என் கவி உணர்த்தும்

## ஆணின் மௌனம்

கனவுகளின் ஓட்டமும்
காதலின் நாட்டமும்
இளமையின் ஆட்டமும்
முதுமையின் வாட்டமும்
பாசத்தின் போராட்டமும்
வாழ்க்கையின் பேராட்டமும்
அடைத்திருக்கும் புரியா
புதிர் பெட்டி

**எஸ். ஜெயசூரியா**
இளம் உயிர் தொழில் நுட்பவியல் (நிறை)

# தொழில் நுட்பத்தின் விளைவு



**ர. ராஜலெட்சுமி,** இளம் வணிகவியல் (முதல்)



# ஹைக்கூ கவிதைகள்

குளத்திற்கு வளைகாப்பு
கல்லெரியும்
சிறுவர்கள்

கிழித்துக் கொடுத்தார்
கோபம் வரவில்லை
பயணச் சீட்டு

பெண்கள் கல்லூரி
அருகில் அறிவிப்பு பலகை
விபத்து பகுதி

மங்கலமாய் இருக்க
பூக்களைப் பறிக்க பலகை
விதவையானது செடி

ஓடி களைத்த களைப்பில்
ஓய்வு எடுத்தது
மைதானத்தில் பந்து

தேனீரோடு செய்தித்தாள்
அன்று
தேனீரோடு கைப்பேசி
இன்று

ரேஷன் கடைக்காரனுக்கு
குழந்தை பிறந்தது
எடைக் குறைவாய்

அன்புடைமை அதிகாரத்தை
ஆசிரியர் கற்பிக்கிறார்
கையில் பிரம்புடன்...

வெயிலில் விளைந்த களைப்பில்
காய்கறிகள் ஓய்வெடுக்கின்றன
குளிர்சாதனப் பெட்டியில்

அத்தனை கவலைகளுக்கும் சேர்த்து
அழுது கொள்கிறாள்
வெங்காயம் அரிகையில்

செய்யாத தப்புக்கு
மண்ணைவாரி இறைக்கின்றன
மாநகர பேருந்துகள்

யாருமில்லா நள்ளிரவில்
யார் மேல் எரிந்து எரிந்து விழுகிறது
தெருவிளக்கு

அலைந்தோடும் மேகங்கள்
மடிஅவிழ்த்தால் தீரும்
பூமிபந்தின் தாகங்கள்!

செய்கூலி இல்லை
சேதாரம் மட்டுமே
மலைகளுக்கு...!

சுய நலம் எனும் குற்றப்பத்திரிக்கையில்
பெரும்பாலும் உடன் பிறப்புகளே
எதிர்வாதிகள்

காய்ச்சல் பற்றிய கவலையே இல்லாமல்
மழையில்நனைந்துகொண்டிருக்கிறது
குடை!ள

**இரா. பவதாரணி**
இளம் (முதல்)

# அறியா ஒருவன்

காற்றோடு கதை பேச துவங்குகள்
இயற்கையோடு இன்பம் இருக்கிறது
என நம்புங்கள்,
உங்கள் ஆன்மா உடன் அலசி
ஆராயுங்கள்,
நிழல்களை நியாயப்படுத்தாமல்
நிஜங்களை மட்டும் பின் தொடருங்கள்,
முன் நின்று யாசிப்பவனுக்கு
யோசிக்காமல் உதவுங்கள்...
ஆட்டோகாரன் சொல்லும் கதையை காது
கொடுத்து கேளுங்கள், அடுத்தவன்
சந்தோசத்தை அதிகபடுத்த சற்று காந்தி
படம் போட்ட நோட்டுகளை உயர்த்தி
கொடுங்கள் இவன் யார் எந்த பின்புலம என்று
கூட அறியாத ஒருவனை பார்த்து மனதில்
இருந்து புன்னகைத்து செல்லுங்கள்
எங்கேயோ தொலைந்து போன
உங்களை மீட்டு எடுக்கும் முயற்சியில்
இதுவே துணையாய் நிற்கும்...

**கு. நிதிஷ்**
இளம் வணிகவியல் துறை (முதல்)

உழைப்பவனை பார்த்து ஊக்கம் கொள்,
உழைக்காதவனை பார்த்து ஏக்கம் கொள்ளாதே!

**ச. பவானி**
இளம் (முதல்)



இன்று வேண்டாம்
நாளை வா நிலா
ஊட்டுவதற்குச் சோறில்லை

காய்ந்த விறட்டியின்
உடம்பு முழுக்க
அம்மாவின் விரல்கள்

பறவைகள் முகம் பார்க்க
கண்ணாடியின்று திரும்பின
வறண்டு போனது நதி

சொர்க்கத்தில் திருமணத்தை
நிச்சயிக்க இத்தனை அவசரமா?
காதலர் தற்கொலை

பறக்காத பூக்களைத்
பறக்கும் பூவாய் வந்தது
பட்டாம் பூச்சி...

மண்ணில் பூத்த கோபுரம்
மேகங்களின் வேகத்தடை
மலைகள்

ஆண் பெண் சமத்துவம் பேசும்
நிகழ்கால உயிர் ஓவியம்
திருநங்கை

ஆசையின் அஸ்திவாரம்
அழிவின் ஆரம்பம்
பாலினம்

நிலாவின் மொழி
சீக்கிரம் புரிகிறது
அம்மாவிற்கு மட்டும்

சிற்பம் ஆக வேண்டுமா
தேவையற்றதை நீக்கி விடு
இப்படிக்கு கல்

இறக்கும் தேதி தெரிந்தாலும்
மகிழ்ச்சியாகவே பிறக்கிறது
நாட்காட்டி

மின்சார வாரியத்திற்கு
தகவல் தந்த பின்னே வருகிறது
இடியும் மின்னலும்

சில்லரைகளை நினைத்தால்
தூக்கம் வருவதே இல்லை
பேருந்தில் கூட

எந்த வலையிலும்
சிக்குவதே இல்லை
நிழல்கள் மட்டும்

தொலைத்தவர் யாரோ
அடிவாங்குவது நான்
இப்படிக்கு பூட்டு

கொடுத்தவர் உறங்குவதில்லை
வாங்கியவர் வருந்துவதில்லை
கடன்

அவள் வந்து விட்டாளா
அடிக்கடி வந்து பார்க்கிறது
அலை

பெண்களுக்கான அதிகப்படியான
இட ஒதுக்கீடு கிடைக்குமிடம்
அடுப்பங்கரை

அனுதினமும்
இரத்த தானம் செய்கின்றேன்
கொசுக்களுக்கு

வாழ்க்கை எனும்
வனாந்தரத்தில் பச்சாதாபமில்லா
பல பச்சோந்திகள்

இப்போதெல்லாம் மனைவி
சொல்லே மந்திரம் – காரணம்
சம்பாதிக்கிறாள் மனைவி

ஆடையை அவிழ்கிறது விரல்
ஆட்சேபனை இல்லை
கையில் வெங்காயம்

கருப்பாய் பிறந்ததினால்
கண்ணீர் வடிக்கின்றன
மேகங்கள்

பட்ட மரத்தில்
ஒரு பசுமை புரட்சி
கிளிகள்

## வாழ்க்கை

முயன்றால் தான் முயற்சி பலன்
அறிவாய், தோல்வியின் தான்
வெற்றியின் அருமை அறிவாய்...
வாழ்வில் அனுபவம் ஒருவனை
எப்படி வேண்டுமானாலும் மாற்றலாம்...
உலகம் அதிசயமாகவே இருந்தாலும்
மனம் விரும்பினால் மட்டும்
ரசிக்க முடியும் நம் வாழ்க்கை பயணத்தை...!

கிடைத்ததை அனுபவிக்க தெரிந்துக்கொள்
கிடைக்காததை ரசிக்க கற்றுக்கொள்...
இருளில் வெளிச்சத்தை தோடதே...
அதை நீ உருவாக்கிக்கொள்!
தட்டிக்கொடுக்க அன்பு இருந்தால்
வேதனையும் சாதனை தான்...

**இரா. பவதாரணி**
இளம் (முதல்)





**செ. பிரியதர்ஷினி**
இளம் (முதல்)

## கல்லூரி

கல்லூரி நாட்கள்
பள்ளிநாட்கள் போன்றது அல்ல

கல்லூரி நாட்கள்
மழை நாட்கள் போன்றது
அது வருவதும் தெரியாது
போவதும் தெரியாது

ஆனால் அந்த மழைதுளிகள்
மண்ணில் பட்டு அம்மண்ணில்
இருக்கும் விதையானது
செடியாக வளர்ந்து செழித்திருக்கும்
அதுபோல்
கல்லூரி நட்களின் நினைவுகளும்
நம் மனதில் என்றும்
அழகாக செழித்திருக்கும்

**ப. வைரலட்சுமி**
இளம்



## ஒரு நாயகியின் கதை

அழகான காலைப்பொழுதில் மகிழ்ச்சியான விடியலைக் கண்ட பிறகு தன் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப உணவினைத் தயாரித்து கொண்டு இருக்கிறாள் சரஸ்வதி. குளித்து விட்டு பள்ளி சீருடை அணிந்து உணவருந்துவதற்காக வந்து அமர்ந்து அம்மாவை அழைத்தான். "அம்மா பசிக்குது சீக்கிரம் சாப்பாடு எடுத்துட்டு வாங்க ஸ்கூலுக்கு நேரமாகுது" என்று அம்மாவை அழைத்தான் விமல், அம்மா உணவை எடுத்து வந்து வைக்க நன்கு உணவினை அருந்தி பள்ளிக்குச் சென்றான். விமலை நல்ல படியாக பள்ளிக்கு வழி அனுப்பி வைத்தாள் அவனது தாய் சரஸ்வதி. அவனை வழி அனுப்பும் போது அங்கு ஒரு லாரி நிறைய வீட்டுப்பொருட்கள் வந்து சரஸ்வதியின் பக்கத்து வீட்டில் வந்து நின்றது. சரஸ்வதியின் பக்கத்து வீடு காலியாக உள்ளது அங்கு குடிப்பெயர்வதற்காக லாரி நிறைய பொருட்கள் வந்து இறங்கின. அதனை ஒரு பக்கமாக பார்த்த படி வீட்டு வாசலில் உறங்கிக் கொண்டு இருந்த தன் குடிகார கணவனை வாலி நிறைய தண்ணீரை எடுத்துக் கொண்டு அவன் மேல் ஊற்றி விட்டு ஊட்டிற்குள் சென்றாள். அதன் பின் ஒரு வாரம் கழித்து சரஸ்வதியின் மகன் விமலுக்கு முழு ஆண்டு தேர்வு வருகிறது. இதில் அவன் தேர்ச்சிப் பெற்றால் அவன் கல்லூரிக்குச் சென்றுவிடுவான் அப்போது தான் அவன் உடலிலும், மனதிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அந்த மாற்றங்கள் அவனது வாழ்க்கையைத் தொலைக்க போகிறது என்ற எண்ணமும் அவன் மனதில் தோன்றுகிறது. அதனை உடனே அவன் தாய் சரஸ்வதியிடம் சென்று கூறுகிறான். அதனைக் கேட்டதும் சரஸ்வதி தன் மகனை மகன் என்று எண்ணாமல் வீட்டை விட்டு வெளியே துரத்துகிறாள். ஏனென்றால் அவளது மகன் திருநங்கையாக மாறிக்கொண்டு வருகிறான். அதனால் அதனை ஏற்று கொள்ள முடியாத தாய் சரஸ்வதி தன் மகனைத் துரத்துகிறாள்.

அவளது காலில் விழுந்து கெஞ்சினாலும் சரஸ்வதி வெளியே தொரத்தவே ஆவலாக இருக்கிறாள். அப்படி அவள் செய்யும் போது பக்கத்து வீட்டில் குடிப்பெயர்ந்த ஒரு பெண் பார்க்கிறாள். சரஸ்வதி செய்வதை தடுக்கிறாள் அந்த பெண். "என்ன நடந்தது" என்று சரஸ்வதியிடம்

கேட்கிறாள். அப்பெண், அதற்கு சரஸ்வதி எல்லாவற்றையும் கூறினாள். அதைக்கேட்ட அந்தப் பெண், "ஒரு அரைமணிநேரம் நா சொல்றத கேக்குறிங்களா" என்று சரஸ்வதியிடம் அந்த பெண் கேட்கிறாள். "என்ன சொல்லப்போறீங்க" என்று கேட்ட சரஸ்வதியை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று தண்ணீர் அளித்து அமரச்சொன்னால். அங்கே விமலும், கண்கலங்கியபடி அமர்ந்திருந்தான். "அம்மா என் பேரு வெண்மதி, கொஞ்ச நேரம் நான் சொல்றத கேளுங்க உங்களுக்கு ஒரு நாயகியின் கதைய சொல்லுறன்... (சொல்ல ஆரம்பித்தாள்) இதே மாறி விஷ்ணு னு ஒரு பையன் அவங்க அம்மாகிட்ட போய் விமல் சொன்ன மாறியே சொல்லிருக்கான். அதுக்கு அவங்க அம்மா சரஸ்வதி மாறியே வெல்ல துரத்தினாள். அந்த இடத்துல எந்த அம்மாவா இருந்தாலும் அந்த கஷ்டம், ஏமாற்றம், இதெல்லாம் தாங்க முடியாம இதுதான் பண்ணிருப்பாங்க. அதே மாறிதான் அந்த விஷ்ணு பையனோட அம்மா பண்ணாங்க. தான் பிள்ளைய ஒரு பெரிய இடத்துல வச்சி பாக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டாங்க. அதெல்லாத்தையும் குழிதோண்டி புதைக்குற மாறி நடந்துட்டு. எந்த பிரச்சனை வந்தாலும் அம்மாகிட்ட சொல்லனு சொல்லுவாங்க, ஆனா இந்த பிரச்சனைய அவன் அம்மாகிட்ட சொன்னதும் அத தாங்க முடியாம அவன வெளியே போகச் சொல்லிட்டாங்க. வெல்லப்போன அந்த பையன் விஷ்ணு என்னப்பன்றது, என்ன செய்றதுனே தெரியாம இருந்தான். எப்படி இந்த சமூகத்துல வாழப்போறோம், எப்படி இந்த சமூகத்துல நிலைச்சி நிக்க போறோம்னு ஒன்னுமே தெரியாம இலைகள் உதிர்ந்த மரத்தைப்போல் உறவுகளை உதிர்ந்ததுப் போல் இருந்தான். அப்போது அவன் யாரிடம் உதவி கேட்பது என்று முழித்துக் கொண்டிருந்தபோது தெய்வமாக அவனுக்கு காட்சியளித்தது திருநங்கைகள் தான். அவர்களிடம் தனக்கு நடந்ததைக் கூறினான்.

அதனைக் கேட்ட அவர்கள் தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு அவன் "நன்றி" தெரிவிக்க "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்" என்று கூறி அரவனைத்துக் கொண்டனர். அந்த மூன்று திருநங்கைகளின் பெயர் நாச்சியார், நந்தினி, நட்சத்திரா,

## வெற்றிக்கான படிக்கட்டுகள்

சிந்தனை உயர்ந்தால், நோக்கம் தெளிவுறும்!
நோக்கம் தெளிவுற்றால், பயணத்தில் ஒளி வீசும்!
பயணம் ஒளியுற்றால், பாதை சிறக்கும்!
பாதை சிறந்தால், பயணம் தொடரும்!
பயணம் தொடர்கையில், இலக்குகள் தெரியும்,
பிறகென்ன ஐயம்? தொடர்ந்து முன்னேறு,
பயணங்கள், தொடரட்டும்
சிந்தனை உயர்ந்ததாக இருக்கட்டும்!

## விமர்சனங்கள்...

தூய்மை இந்தியா பேனர் வைக்கப்பட்டுள்ளது
குப்பை கூளங்களின் மத்தியில்...

தேங்கிய நீர் தொட்டி...
தேங்கும் கழிவுநீர் நீங்கும் வரையில் தீங்குகள் ஓங்கும்
எழுதியுள்ளது பக்கத்தில்...

அதிகாரம் இருந்தால் எதையும் மாற்றலாம்
ஆனால் மாற்றவில்லை, மாறவில்லை
யாரும், எதையும்...

அரசு உள்ளது,
மக்கள் உள்ளனர்,
மக்களுக்கான அரசு தான் இல்லை...

சில ஆண்களால் மட்டுமில்லை பல பெண்களுக்கு பாதிப்ப
அவர்களின் அரைகுறை ஆடையினாலும்...

**சா. ஷாஹின்**
இளம் நுண்ணுயிரியல் (முதல்)



இவர்களுடன் சேர்ந்தாள் விஷ்ணு என்கிற நாயகி. அவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியாக இருந்தாள் நாயகி. அவளுக்கு படிக்க ஆர்வம் உள்ளது என்பதனை அறிந்து அவளை படிக்க பள்ளிக்கு அனுப்பி வைத்தனர். பத்தாம் வகுப்போடு படிப்பை முடித்த நாயகி மீண்டும் பதினொறாம் வகுப்பு சேர்ந்தாள். பள்ளியின் முதல் நாள் அன்று பள்ளிக்குச் சென்ற அவள் அனைவராலும் ஒதுக்கப்பட்டாள். மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள் என்று அனைவராலும் ஒதுக்கப்பட்டாள். அதனால் அவளது படிப்பை மகிழ்ச்சியாக படிக்க முடியவில்லை. கவலையோடும், கஷ்டத்தோடும் இருந்தாள். அதைக் கண்ட நந்தினி, “இங்க பாருடா செல்லம் நீ ஏன் கஷ்டமா இருக்குறனுலா நான் கேட்க மாட்டன் ஏனா எனக்கு தெரியும் ஏன் சோகமா இருக்குறனு நம்மள மாதிரி இருக்குறவங்க வெளியே தலைய காட்டுறதே பெருசு ஆனா நீ வெளியே தைரியமா ஸ்கூலுக்குப் போற தன்னோட அடையாத்த வெல்ல காட்ட பயப்படுற வங்க மத்தியில தன்னோட அடையாளத்த காட்டனும்னு வெல்ல போற உன்ன மாறி உள்ளவங்க எந்த தடை வந்தாலும் பாத்துக்கலாம் னு சொல்லிட்டு போயிட்டே இரு” என்று நந்தினி நாயகியிடம் அறிவுரைக் கூறினால் அடுத்த நாள் காலையில் புத்துணர்ச்சியோட பள்ளிக்கு கிளம்ப இருந்த நாயகிக்கு ஒரு பெரிய அதிர்ச்சி, என்னனா, நாச்சியார், நந்தினி, நட்சத்திரா இவங்க மூணு பேரும் நைட் வெல்ல போயிட்டு திரும்ப வரும் போது நாலு, ஐந்து குடிகாரக்கும்பல் அவங்களை பாத்து வெறுப்பாகி மது பாட்டில் உடைச்சி அவங்க மூணு பேரையும் குத்தி கொண்ணுட்டாங்க. அந்த செய்திய கேட்ட நாயகி கதரி அழுதாள் தனக்கென்று இருந்த அந்த ஒரே உறவைத்தொலைத்துக் கொண்டு முள் இல்லாத கடிகாரம் போல இருந்தாள் நாயகி. அவர்களை கொன்ற அந்த கும்பலை காவல்துறைப் பிடித்துவிட்டாலும் அதனால் நீதி ஒன்றும் கிடைக்க போவதில்லை. இது நிற்காமல் நடந்துக் கொண்டு தான் இருக்கப்போகிறது திருநங்கையாக இருப்பது என்ன பெரிய குற்றமா இது கடவுள் எங்களுக்காக தந்த வரம். அவர்கள் பத்து மாதம் என்னை கருவில் சுமந்து பெற்றேடுக்கவில்லை ஏனென்றால் எங்களுக்கு குழந்தைப் பாக்கியம் என்பது இல்லை ஆனால் மனது என்று ஒன்று உள்ளது அதில் என்னை பிள்ளையாக பெற்றெடுத்தனர் என்று நாயகி அவளது உள்ளத்தில் அழுதுக்கொண்டு இருந்தாள். அந்த அமைதியான இடத்தில்

அவள் விட்ட கஷ்டமும், துன்பமும் மீண்டும் அதே இடத்தில் தொற்றிக் கொண்டனர். அதன் பின் அவள் பள்ளி செல்ல விருப்பம் இல்லாமல் பள்ளிக்குச் சென்றாள். நன்றாக பள்ளி படிப்பை முடிக்காவிட்டாலும் தன் பள்ளி படிப்பை முடித்தாள். அதன் பின் அவள் குறுகிய பாதையில் இருந்து நெடுஞ்சாலைக்கு சென்றாள். அதாவது பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் சென்றாள். பள்ளியில் அவளுக்கு கிடைத்த அவமானங்கள் வெறும் ஆரம்பம் தான் ஆனால் இப்போது தான் அதனை முழுமையாக அடையப்போகிறாள். திருநங்கைகளை எந்த அளவுக்கு மக்கள் வெறுத்து ஒதுக்குகிறார்களோ அதே அளவுக்கு அவர்களை விரும்புவர்களும் இருக்கின்றனர். ஆனால் அவர்களைக் கண்டு பிடிப்பது கடினம். பள்ளியில் அவள் தனிமையாக இருந்தது போல் கல்லூரியிலும் தனிமையாக இருந்தாள்.

கல்லூரியில் அவளுக்கு நேர்ந்த துன்பங்கள் எல்லாம் அம்பாக அவள் நெஞ்சத்தைக் குத்தி கிழித்தது. அந்த காயத்தற்கு மருந்தாக அவள் வாழ்க்கையைக் காப்பாற்றிய மூவர் தான் துன்பம் வரும் போது அவர்களை எண்ணினாள். திருநங்கைகளுக்கு பகல் என்பது கஷ்டத்தோடு தான் போகும் இரவ என்பது வந்து விட்டால் அது நரகம். இரவில் எங்கையாவது அவர்களைப் பார்த்தால் பாலியல் ரீதியாக நிறைய பிரச்சனைகள் வரும் அதுப்போல் நாயகிக்கும் அந்த பிரச்சனைகள் வரிசையாக வந்தது. ஆனால் அது எல்லாவற்றலும் இருந்து அவள் தப்பினாள் அது அவளுக்கு கிடைத்த பெரும் அதிர்ஷ்டம். அதுமட்டுமில்லாமல் ஒரு நாள் இரவில் நாயகியிடம் ஆண்கள் பிரச்சனை செய்த போது காரில் வந்த ஒரு பெண் காவலாளி நாயகியைக் காப்பாற்றி அவளுக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்தார் அந்த பெண்காவலாளி, திருநங்கைகளை விரும்பும், பாதுகாப்பும் தரும் அந்த பெண்காவலாளியை கடவுளாக எண்ணினாள். அதனால் அவரைப்போல் ஒரு காவலாளியாக மாற வேண்டும் என்ற எண்ணமும் அவளிடம் தோன்றியது. கஷ்டங்களும், துன்பங்களும் கல்லூரியின் படிப்புக்காலத்தில் நாயகியைச் சூழ்ந்தாலும் வெற்றிகரமாக படித்து முடித்தாள் படித்து முடித்த பிறகு அந்த பெண் காவலாளியிடம் தான் காவலராக ஆகப்போகிறேன் என்று கூறி, அவரிடம்



## அம்மா...

எல்லா உயிரும் நேசிக்கும் ஒரு ஜீவன் அம்மா!

எல்லா உயிரையும் நேசிக்கும் ஒரே ஜீவன் நீ மட்டுமே!

பல இடங்களில் அன்பைகாட்டி, அடிமை பட்டு போகிறாய்

சில இடங்களில் விவேகமாக இருக்கும் நீ... பல இடங்களில்

வெகுளியாய் உன்னை காட்டுகிறோம்...

குடும்பத்தின் துன்பங்களை கேட்க நேரம் கொடுக்கும் உனக்கு,

உன் துன்பத்தை பகிர்ந்து கொள்ள ஆளும் நேரமும் கிட்டவில்லையோ?

குடும்பத்தின் சுமைகளை தாங்கும் நீ, ஒருபோதும் என்னை

சுமையாக பார்த்ததில்லை... நான் கருவறையில் இருந்த போது கூட..

உனக்கு நான் அளிக்கும் ஒரே பெருமை "அம்மா" என்று விளித்தல் தான்!

## ஆண் தோழன்

அவன் தோள்களில் சாய்ந்தபடி என்பெற்றோரிடம் உரையாட வேண்டும்!

எவன் ஒருவனிடம் நீ நீயாக இருக்க முடிகிறதோ, அவனே சிறந்த நண்பன்... அவன் என் தோழனாக இருக்க வேண்டும்!

சிறந்த நண்பன்... அவன் என் தோழனாக இருக்க வேண்டும்!

அடிக்கும் கைகள் தான் அரவனைக்கும் என்றார் ஆன்றோர் ஒருவர்,

இது உண்மையானதை என் பெற்றோரிடத்தில் கண்டேன்...

இதன் பொருளை அவனிடமும் காண வேண்டும்!

நான் தவறு செய்தால் அவன் கை, என் தலை தட்ட வேண்டும்!

எத்தவறும் செய்யாத போது உறுதுணையாய் தோள் தட்ட வேண்டும்!

எனக்கு கிடைக்கும் தோழன் உடன்பிறவா சகோதரனாக இருக்க வேண்டும்!

தோழனை எதிர்நோக்கி காத்திருக்கும் தோழியின் மனவோட்டம்.

பணத்தை அனாவசியமாக செலவு செய்ய மாட்டோம்
தந்தையின் கஷ்டத்தை உணர்ந்தால்...

பார்க்கிறோம் எத்தனையோ ஏழைகளை
பத்து ரூபாய் கொடுக்கத்தான் மனம் வரவில்லை...

பள்ளிக்கூடம்..
நான் வாழ்ந்த ஒரு அழகான அரண்மனை..
வஞ்சகமில்லா நல்ல நண்பர்கள்..
அன்பால் அரவணைத்த ஆசிரியர்கள்..
மீண்டும் கிடைக்குமா அந்த நாட்கள்..

நண்பர்களின் நினைவுகள்!..
சின்ன சின்ன சண்டைகள்
பெரிய பெரிய சேட்டைகள்..
அழகான நாட்கள்..
அற்புதமான நண்பர்கள்..

நினைத்தால்,
இதயம் கனக்கிறது...
கண்கள் கண்ணீர் சிந்துகிறது..

பூமியில் தண்ணீர் அதிகமாகிறது..
மனதில் ஈரம் இல்லாமல் போகிறது..

பார்த்து பார்த்து கட்டினேன் அன்பு இல்லத்தை
இப்பொழுது வாழ்கிறேன் முதியோர் இல்லத்தில்...

**சா. ஷாஹின்**
இளம் நுண்ணியிரியல் (முதல்)



ஆலோசனைகள் பெற்று துன்பங்கள், துயரங்கள், கஷ்டங்கள் என எல்லாவவற்றையும் தகர்த்து ஒரு காவலராக மாறினாள் நாயகி. திருநங்கைகளைப் பார்த்தால் எகத்தாளமாக தட்டும் கைகள் அன்றிலிருந்து அதே வணக்கம் வைக்க தொடங்கியது. அதன் பின் சிங்கப் பெண்ணாக வளம் வந்தாள் நாயகி. அப்போது அந்த பெண் காவலாளி நாயகியை அழைத்து, "உனக்கு ஒரு பரிசுதருகிறேன்" என்று கூறி அவள் கண்களை மூடி பரிசை எடுத்து வந்து கண்களை திறந்தாள் அவளுக்கு அந்த பெண்காவலாளி அளித்த பரிசு நாயகியின் அம்மா. அதிர்ச்சியில் நின்ற நாயகியிடம் அப்பெண் கூறினாள். "உங்க அம்மாவும் நானும் நெருங்கிய நண்பர்கள் அன்று உன்னிடம் பிரச்சனை செய்த போது காரில் உன் அம்மாவுடன் தான் வந்தேன். அப்போது உன் அம்மா அது என் மகன் என்று கூறினாள். அதன்பிறகு உனக்கு நான் செய்த எல்லா உதவிகளும் உன் அம்மா கூறி தான் நான் செய்தேன்" என்று நாயகியிடம் கூறினாள். அதனைக் கேட்ட நாயகி கண்கலங்கி தன் அம்மாவைக் கட்டி அனைத்தாள். அவள் அவளுக்கு மறைமுகமாக செய்த உதவி மற்றும் நாச்சியார் நந்தினி, நட்சத்திரா இவர்கள் அளித்த அரவணைப்பு அவளை நாயகனிலிருந்து நாயகியாக மாற்றி இருக்கிறது. என்று கதையைக் கூறி முடித்தாள் வெண்மதி.

அதனைக் கேட்ட சரஸ்வதி தன் மகளை பிடித்து இழுத்து கட்டி அணைத்து முத்தமிட்டாள். "என் மகனை நான் நாயகி துன்பங்கள், துயரங்கள் அனுபவித்ததுப் போல் என் மகனை தவிக்க விடமாட்டேன்" என்று கூறி வெண்மதிக்கு நன்றி தெரிவித்தாள் அவள் மனதை மாற்றி அமைத்ததுற்கு "நீங்க என்கிட்ட சொன்னது உண்மையானகதையா இல்ல கற்பனைகதையா" என்று வெண்மதியிடம் சரஸ்வதி கேட்கிறாள். "ஆம் அது உண்மைக் கதை தான்" என்றாள் வெண்மதி. "அப்படி என்றால் அந்த அம்மாவை நான் பார்க்க முடியுமா?" என்றால் சரஸ்வதி அதுக்கு வெண்மதி "நான் தான் அந்த அம்மா.... " என்றாள்.

**மு. கார்த்தி**
இளம் வேதியியல் (முதல்)

## நினைவுகளுடன் மறதி...

எதை மறக்க நினைக்கிறோமோ அதை
நினைக்கிறோம்.
எதை நினைக்க நினைக்கறோமோ
அதை மறக்கிறோம்.
நாள் தோறும் இரவல் கடிகார ஒலி
அமைக்க நினைக்கிறோம்.
ஆனால் விடியல் காலையில் அதை
நிறுத்த மறக்கிறோம்.
அனைவருக்கும் முன் பள்ளிக்கூடம் வர
நினைக்கிறோம்.
இரவு முழுவதும் எழுதிய வீட்டு
பாடத்தை பையினுள் எடுத்து வைக்க
மறக்கிறோம்...
ஓட்டப்பந்தயத்தில் நண்பனுடன் ஓடி
தோற்றதை நினைக்கிறோம்.
அதே நண்பனோடு போடும்
சண்டைகளை மறக்கிறோம்.
தேர்தலில் ஜெயித்தால் ஆட்சி
என நினைக்கிறோம்.
ஓட்டு போட்ட மக்களை
பற்றி மறக்கிறோம்.
வீட்டிற்காக மரங்களை வெட்ட
நினைக்கிறோம்
ஆனால் பின்பு அதை
வளர்க்க மறக்கிறோம்
ஒரு ரூபாய் மீட்டாய்க்காக தங்கையுடன்
சண்டை போட நினைக்கிறோம்



## போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து..!

என்னிடம் மாடி வீடு இல்லை
எத்தனையோ பேருக்கு வீடே இல்லை...

என்னிடம் நான்கு சக்கர வாகனம் இல்லை...
எத்தனையோ பேரிடம் செருப்பே இல்லை...

என்னிடம் பிரியாணி இல்லை
எத்தனையோ பேரிடம் பழையசோறே இல்லை...

என்னிடம் நிறைய துணிகள் இல்லை
எத்தனையோ பேரிடம் ஒரு நல்ல துணி கூட இல்லை...

எனக்கு உடன்பிறந்தவர்கள் இல்லை
எத்தனையோ பேருக்கு தாய் தந்தையே இல்லை...

நான் பெரிய கல்லூரியில் படிக்கவில்லை
எத்தனையோ பேரிடம் கல்வியே இல்லை...

நாம் பார்க்க கூடாத நமக்கு மேலுள்ளவர்களை
பார்க்க வேண்டும் நமக்கு கீழுள்ளவர்களை...

நமக்கு மேலுள்ளவர்களை பார்த்தால் வரும்,
பொறாமை, கோபம், பேராசை...
நமக்கு கீழுள்ளவர்களை பார்த்தால் வரும்,
பொறுமை., அமைதி, போதுமென்ற மனம்...

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!...
தந்தைக்கு மேல் வளர்ந்தால் அவரிடம் பேச மனம் வரவில்லை
அவரின் பணம் மட்டும் போதும்...

என் வயிறு நிரம்பவில்லையென்றால்
என் தாய் மனம் நிரம்பாது...

விஷயம், இந்த வயதில் அனைவரும் இதனை சந்தித்து இருப்பார்கள். வாழ்க்கை என்ற பயணத்தில், இதனை கண்டு வழியில் நின்றவர்கள் சிலர் அதனை கடந்து சென்றவர்கள் பலர், இதில் நீ எந்த வகை?" என்று கேட்க, மாங்கனிக்கு ஒரு புதிய உத்வேகம் பிறந்தது, "நான் அதனை கடந்து வருவேன்" என்று மங்கையிடம் சத்தமாக கூறினாள். பலரிடம் கூறிய போது "இங்க பாரு மாங்கனி, நான் என் அனுபவத்துல நிறைய பேர பாத்து இருக்க, நீயும் அதுல போய் சிக்கிடாத என்று அவளுக்கு நன்று புரியும் படியாக கூறினாள். அதற்கு பிறகு அவள் மாதேஷிடம் இருந்து விலகி படிப்பில் அதிக ஆர்வம் கொள்கிறாள். மாதேஷ் மட்டுமின்றி வேரு யாரைய பார்த்தும் அவளுக்கு வேறு எந்த எண்ணமும் வரவில்லை; என்று ஆட்சியர் கூறியதும், தன்னை ஒரு கதாபாத்திரமாக நினைத்து கதை கேட்ட அனைவருக்கும் அதிலிருந்து வெளியே வரமுடியாமல் திகைத்தனர்.

மேலும் ஆட்சியர் "இதிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்வது என்னவென்றால் முதலில் பெற்றோரிடம் எதையும் மறைக்காதீர்கள்! நன்மையோ தீமையோ நீங்கள் செய்யும் அனைத்து செயல்களையும் கூறுங்கள். மாங்கனி செய்த தவறு, தன் பெற்றோரிடம் மாதேஷைப் பற்றி கூறாமல் இருந்ததுதான். அவள் செய்த சரியான விஷயம், அவள் நண்பர்களின் சேர்க்கைதான். இரண்டு தோழிகள் இருந்தாலும், அவர்கள் இருவருமே மாங்கனிக்கு நன்மைதான் செய்துள்ளார்கள். அதனால் நீங்கள் மாங்கனி நண்பர்களை போல, நல்ல நண்பர்களை சேர்த்துக் கொள்ளுங்கள், அவள் செய்த தவறை செய்யாதீர்கள்! வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்" என்று தன் உரையை முடித்ததும் கைத்தட்டும் ஒலி காதை பிளந்தது.

பிறகு கூட்டத்திலிருந்து ஓடி வந்த சிறுவன் ஒருவன், ஆட்சியரிடம் அந்த மாங்கனி நீங்கள் தானே? என ஆவலுடன் கேட்டான். அதற்கு ஆட்சியர், "இல்லை" என்று கூறிவிட்டு, அவன் தலையைக் கோதிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். தான் ஒரு தவறான உதாரணமாக இருந்துவிடக்கூடாது என்றெண்ணி பொய்கூறி சென்றார்.

**ச. பவானி**
முதுகலை கணிதம் (முதல்)



வீட்டுப்பாடம் எழுதித் தர கேட்கையில்
அதை மறக்கிறோம்
செய்முறையில் குறை என்பது
பகை என நினைக்கிறோம்
வலியில் கூட இருந்த
பாசத்தை மறக்கிறோம்.
சொத்துக்காக நீதிமன்றம்
ஏற நினைக்கிறோம்.
சொந்தத் தம்பி என்று கூட
பாரபட்சம் பார்க்க மறக்கிறோம்...

**ரா. சந்தியா**
இயற்பியல் (இரண்டாமாண்டு)

## கடிகாரம்

நொடி பொழுதும் நான்
உன்னை மறவேன் – நீ
நிமிடமாகி மணியாகி
நாட்களாள் மாறினாய்
வாரங்களானாய்
மாதங்களானாய்
வருடங்களானாய்
நீ இன்றி இவ்வுலகம் இல்லை
ஒவ்வொரு நொடியும்
முன்செல்வதே உன் பணி
உன் பின் செல்வதே
என் பணி

**ரா. அபிராமி**
இயற்பியல் (இரண்டாமாண்டு)

ஓர் அடியில் உலகையே அளந்தான்....
வாமனர்
அது விஷ்ணு அவதாரம்
இரண்டு அடியில் உலகையே அளந்தான்
வள்ளுவன்
அது என் தமிழனின் அவதாரம்
தொன்மை அறிய அகத்தியம்,
இலக்கணம் கற்க
தொல்காப்பியம் உண்டு...
புகழ்வதற்கு புறநானூறு உன்டேனில்
அறிவதற்க்கு அகநானூறும் உண்டு
கால் சிலம்புக்கு ஒரு அதிகாரம்
அணியும் மணிக்கு ஓர்
கலை
வளை ஓசையில் பதிகம்
ஐந்து இடங்களை விளக்கி காட்ட
குறுந்தொகை
இதில்
குறுக்கிட வேறு உண்டோ!
என்ன இல்லை எம்மொழியில்
அகத்தியன் தொட்டில் ஆட்டி
மூவேந்தர் முறைப்படி பாதுக்காத்து
ஆண்டுகள் பல கடந்தன
நிலையாய் நிற்கும் ஒரு கலையே
என் தாய்மொழி தமிழ்!

**கோ. நவின் பாலாஜி**
இளம்



அதனால் அவனுடன் பேசவேண்டுமென்பதற்காக தினமும் ஒரு முறையாவது முகநூலில் செய்தியை பகிர்ந்துக் கொள்வான். வகுப்பில் அத்தனை பேர் இருந்தும் கூட அந்த ஒரு பையனிடம் மட்டுமே பேச வேண்டுமென்று மாங்கனிக்கு தோன்றியது. ஆரம்பத்தில் மாதேஷ்வரனும் மாங்கனியுடன் நன்றாக தான் பேசினான். இவர்கள் இருவருமே பாடங்களில் சந்தேகம் கேட்பதும் அதை தீர்த்து வைப்பதுமாக இருந்தனர். நாளடைவில் மாதேஷ் கேட்காமலேயே, மாங்கனி அவனுக்கு நிறைய உதவிகளை செய்தாள். எந்த ஒன்றும் கேட்டகாமல் கிடைத்தால் சலிப்பை தான் ஏற்படுத்தும் என்பதற்கு இனங்க மாதேஷ் மாங்கனியிடம் கோபம் கொள்கிறான்.

அவளை இம்சையாக பார்த்தான். எதனால் மாதேஷ் இப்படி நடந்துக் கொள்கிறேன் என்பதை அறியாத மாங்கனியோ தொடர்ந்து அவனிடம் பேசிக்கொண்டே இருந்தாள். இதனால் கோபம் அடைந்த மாதேஷ் அவளை திட்டி விடுகிறான். அதானல் மணமுடைந்து மாங்கனி இதைப்பற்றி யாரிடமாவது கூற வேண்டும் என்று நினைக்கிறாள். இதனால் வீட்டில் யாரிடமும் பேசாமல் பித்து பிடித்தது போல இருந்தாள். என்ன நடந்தது என்று தெரியாமல் அவளின் பெற்றோர் அவளிடம் கேட்கிறார்கள். இதுவரை தன் பெற்றோரிடமிருந்து எதையும் மறைக்காத மாங்கனி முதன்முறையாக தன் பெற்றோரிடமிருந்து மாதேஷ் யை பற்றி மறைக்கிறாள். ஏனென்றால் அவளுக்கு பயமாக இருந்தது. அப்போது ஒரு காகிதத்தில் தன் கோபத்தை எழுதி மாதேஷிடம் கொடுத்தாள். அவள் வார்த்தையையே மதிக்காதவன், அவள் எழுத்தை மட்டும் எப்படி மதிப்பான். அவன் அந்த காகிதத்தை தூக்கி எரிந்துவிட்டான. நல்வாயப்பாக அவன் அந்த காகிதத்தை பார்க்கவில்லை என்று எண்ணும்படியாக அவள் வாழ்வில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அதுவே அவள் வாழ்கையின் திறுப்புமுனை என்று கூட சொல்லாம். அதுதான் அவளின் பள்ளி தோழிகளான மங்கை மற்றும் மலர். இவர்கள் இருவரிடமும் தன் உணர்ச்சிகளை தொலைபேசி வாயிலாக வெளிப்படுத்தினாள்.

அவர்கள் இருவருமே மாங்கனியை போல் நிறைய பெண்கள் பார்த்து இருக்கிறார்கள். அதனால் மாங்கனி கூறியதும் அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். மங்கை, அவளுக்கு புரியும்படி அமைதியாகவும் பொறுமையாகவும் “இது ஹார்மோன்களின் வேலை, இது சாதாரண ஒரு

மலர், இவள் பெயருக்கு சற்று எதிரும் புதிருமாக இருப்பவள். மலர் ஒரு வருட காலம் தான் மாங்கனியுடன் படித்தாள். ஒரு வருடம் மாங்கனியுடன் இருந்தாலும், அவளை நன்கு புரிந்துக் கொண்டாள்" என்று ஆட்சியர் மாங்கனியை பற்றியும் அவளின் நண்பர்கள் பற்றியும் கூறினார்.

பிறகு "மாங்கனி தன் தந்தையுடன் கல்லூரியில் நுழைந்தாள். தன் வகுப்பறையை கண்டுபடித்து அமர்ந்தாள். முதல் நாள் என்பதால் அவளுக்கு மிகவும் பயமாக இருந்தது. முதல் வகுப்பில், பேராசிரியர்கள் கல்லூரியின் நெறிமுறைகள் பற்றியும் பழைமையைப் பற்றியும் கூறினார்கள். பின் ஒவ்வொரு மாணவ, மாணவிகளும் தங்கள் பெயர் மற்றும் ஊரை மற்றவர் அறியும்படியாக கூறுமாறு கேட்டனர். மாங்கனியும் தன் பெயர் மற்றும் ஊரை கூறினாள். மாங்கனிக்கு, கல்லூரி சூழ்நிலை சில நேரங்களில் வியப்பையும் பல நேரங்களில் பள்ளியை போல் இருந்ததால் சலிப்பையும் தந்தது.

இரண்டாம் வகுப்பிலும், முதல் வகுப்பில் நடந்தது போல தான் இருந்தது. மாற்றம் என்னவென்றால் பேராசிரியர் மட்டும் தான். பேராசிரியர்கள் வகுப்பறைக்குள் நுழையும் போது, கையில் வருகை பதிவேடு கொண்டு வந்தார்கள். மாங்கனியோ தன் வகுப்பு மாணவ மாணவிகளின் பெயரை அறிய வேண்டுமென்ற எண்ணத்தில் கடைக்கண் பார்வையால் அந்த வருகை பதிவேட்டை பார்த்தாள். அப்போது அவள் ஒரு ஆண்மகனின் பெயரை பார்த்தாள். அந்த பெயரை பார்த்ததும் அவள் மனதில் "இந்த பையன் யார்?" என்ற கேள்வி எழும்பியது. ஏனெனில் அந்த பெயர் அவள் பக்கத்து வீட்டு பையன் பெயர். கேள்வி எழும்பியது மட்டுமல்லாமல் அவனை பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தோடும் இருந்தாள். அவள் நேரம்! அந்த பையன் அன்று கல்லூரிக்கு வரவில்லை. அப்போது அவளின் அந்த ஆர்வம் எதிர்பார்ப்பாக மாறியது. மறுநாள் அவனை பார்த்ததும் அவள் எதிர்பார்ப்பு முற்றுபெறுவதற்கு மாறாக, அடுத்த அடியை நோக்கி சென்றது...

அவளுக்கு அந்த உணர்வு மிகவும் புதிதாக இருந்தது. அவனிடம் பேச வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. சந்தர்பம் கிடைக்குமா என கழுகு போல காத்திருந்த அவளுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அவனுடன் பேசிய போது மாங்கனிக்கு அது புதிதாகவும் நன்றாகவும் இருந்தது. அவள் நன்றாக ஆக உணர்ந்தாள்.



**முன்னுரை**

தோற்றத்தாலும், பிறப்பாலும், ஆணாகப் பிறந்து உடலாலும் மனதாலும் பெண்மையை உணர்ந்து ஆணாக இருப்பினும் தன் பாலின அடையாளத்தை விட்டு முழுமையாக பெண்ணாக விரும்புகிறார்கள். இதில் ஆணாக பிறந்து பெண்ணாக மாறுபவர்களை திருநங்கை என்றும், பெண்ணாக பிறந்து பாலின உணர்வின் மாற்றத்தால் ஆணாக மாறுபவர்களை திருநம்பி என்றும் அழைக்கின்றோம். இவ்வுலகில் ஆண் பெண்ணாக இருவருக்கும் இடையே நடக்கும் சமம் என்ற போரில் மூன்றாம் பாலினத்தினர்கள் ஆனா இவர்களை மறந்து விடுகிறோம். இவர்கள் கடந்து வந்த பாதைகளையும் அவர்கள் தினந்தோறும் படும் பாடுகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

**வீட்டின் எதிர்ப்பு**

திருநங்கை ஆகவும் திருநம்பியாகவும் மாறுபவர்கள் யாருமே சிறுவயதிலிருந்தே இப்படி பிறப்பதில்லை வளரும் வயதில் ஹார்மோன் மாற்றத்தினாலும் பாலின வேறுபாட்டாலும் மாறிவிடுகிறார்கள். இவர்களின் மாற்றத்தை அவ்வளவு எளிதில் வீட்டில் உள்ளவர்கள் புரிந்து கொள்வில்லை வீட்டில் உள்ளவர்களையும் ஒரே கவலை எவ்வாறு ஒரு திருநங்கையும் திருநம்பியையும் வீட்டில் இருந்தாலவ் அக்கம் பக்கத்தினர் என்ன கூறுவார்கள் என்று தானே தவிர, தன் பாலினத்தில் இருந்து மாறியவர்கள் பற்றி இல்லை இதனாலே திருநங்கையும் வீட்டினால் ஒதுக்கப்படுகிறார்கள்.

**கேலியும் கிண்டலும்**

ஆணாக பிறந்து பெண்ணாக மாறி தான் வாழ்க்கை தன் கையில் தான் உள்ளது என்று எண்ணி ஒவ்வொரு திருநங்கையரும் வீட்டை விட்டு வெளி வருகிறார்கள். பிறந்து வளர்ந்த வீட்டை விட்டு தான் மாற்றத்துக்கு மதிப்பு கொடுத்து இந்த மாற்றத்துடனே வாழ்க்கைளை வாழ விரும்பும் இவர்களை கேலிக்கும் கிண்டலுக்கும் ஆட்படுத்தி சுயமரியாதையை பறித்து சில மிருகங்களால் ஒதுக்கப்படுகிறார்கள். இவர்களை ஆழி, அரவாணி, பேணி, ஒன்பது போன்ற பெயர்களின் கேலிக்கு ஆளாகிறார்கள்.

**அன்றாட போராட்டங்கள்**

சொந்தக் காலில் நிற்கவும் சுயமரியாதையுடன் வாழவும் வேலை கேட்டு கடை கடையாக ஏறுகிறார்கள் அங்கே அவர்களுக்கு கிடைப்பது பிச்சைகளும் அவமரியாதைகளும் தான் விருப்பமின்றியும் பலர் விபச்சார

பாலியல் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ வாழ முடியாமல் நாள்தோறும் மன உளைச்சலுடன் வாழ்கின்றனர். குடும்பத்தை விட்டு விலகி ஆங்காங்கே திருநங்கைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். குடும்பத்தை விட்டு விலகி ஆங்காங்கே திருநங்கைகளுடன் வாழ்ந்து வருகின்றனர் இவர்களை கேலி செய்யும் வீடியோக்கள் ஆங்காங்கே வளர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

**உரிமைகள்**

தற்போதில் பெருதளவில் முயன்று அவர்களுக்கான உரிமைகளை பெற்று வருகின்றனர் பிறரை மட்டும் நம்பி இல்லாமல் தனக்குள்ள தனிச்சிறப்பால் பலதுறையிலும் சாதித்து வருகின்றனர். ஏப்ரல் 15, 2008 ஆம் ஆண்டு தமிழக அரசு திருநங்கையர்களுக்கு தனி நல வாரியம் அமைத்துள்ளது. முழுமையாக பெண்ணாகவும் ஆணாகவும் இல்லாமல் இருக்கும். இவர்களை சில நாடுகளில் சட்டப்படி மூன்றாம் பாலினத்தினர் என்று அங்கீகரிக்கப்படுகின்றனர். இவர்களின் உரிமைகள் குடும்ப சட்டத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது.

**திருநங்கையின் படைப்புகள்**

எவ்வளவுதான் சமூகத்தினர்களால் ஒதுக்கினாலும் தன் வெற்றி பயணத்தால் திருநங்கை பலர் எல்லாவற்றையும் தோற்கடித்து விடுகிறார்ள் இந்தியாவின் முதல் போலீஸ் திருநங்கை ப்ருத்திகா யாஷினி என்பவர் தமிழ்நாட்டின் திருநங்கை என்ற பெயரை முதன் முதலில் பயன்படுத்தியவர் தமிழ்நாடு அரசின் தமிழ் பாடநூலில் வாழ்க்கை பாடமாக உள்ளவர் மற்றும் கலைமாமணி விருது போன்ற பெருமைக்கு செந்தக்காரர் திருநங்கை நர்த்தகி நடராஜ் இவர்கள் மட்டுமல்ல சாதனையாளர்களின் பலர் திருநங்கைகளாக உள்ளார்கள்.

**முடிவுரை**

எனவே ஹார்மோன்களின் மாற்றத்தினால் தான் இவர்கள் வேறுபடுகிறார்களே தவிர அவர்களின் திறமைகளும் சாதிக்கும் உணர்வும் சாமானியர்களை போன்றே அவர்களே சாதனையாளர்கள் இன்றே.

திருநங்கைகளை மதிப்போம் நாள்தோறும் அவர்களுக்கு திருநாளாய் அமைய வழி வகுப்போம்.

**ரா. சந்தியா**
இளம்



எல்லோரிடமும் கேட்டு அலைந்து திரிந்து அப்ளிகேஷனை மூன்று நான்கு கல்லூரியில் போட்டனர். அவளோ பன்னிரெண்டாம் வகுப்பில் 550க்கு மேல் பெற்று, தன் பள்ளியில் முதலிடம் பெற்றவள் என்பதால், அவள் அப்ளிகேஷன் போடாத கல்லூரியில் இருந்து கூட தொலைபேசி வாயிலாக அழைத்து, “எங்கள் கல்லூரியில் உள்ள பிள்ளை கேட்கும் கோர்ஸ் இருக்கிறது. ஒரு வருடத்திற்கு 80,000 விகிதம் 3 ஆண்டுகளுக்கு 2,40,000 மட்டுமே, நீங்கள் கல்வி கட்டணம் ஒட்டு மொத்தமாக இல்லாவிடினும், தவணை முறையில் கூட செலுத்திக் கொள்ளலாம். இந்த கட்டணம் கூட உங்கள் பிள்ளை 550க்கு மேல் பெற்றதால் தான் குறைத்து கொள்கிறோம்” என்றதும் அப்பாவிற்கு தூக்கி வாரி போட்டது. அவர் அழைப்பை துண்டித்து விட்டு, குடும்பத்தினரிடம் “என்ன இந்த படிப்புக்கு இவ்வளவு பணம் கேக்குராங்க!” எடனே தன் மகளை பார்த்து “நீ வாம்மா, உனக்கு செலவே இல்லாம... படிக்க வைக்கிற” என்று கூறினார். அவர் கூறியது போலவே அவளுக்கு ஒரு நல்ல கல்லூரியிலிருந்து அழைப்பு வந்தது. சாதாரணமாக ஒரு வருடத்திற்கு 25,000 கல்வி கட்டணம் வசூலிக்கப்படும். ஆனால் இவளின் மதிப்பெண்ணிற்காக 10,000 மட்டுமே கல்வி கட்டணம். இதனால் குடும்பத்தில் அனைவருக்கும் மகிழ்ச்சி... அக்கம் பக்கத்தினர் அனைவரிடமும் தன் மகளை ஒரு பெரிய கல்லூரியில் சேர்த்து விட்டதாக கூறி மிகவும் ஆனந்தமாக இருந்தனர்.

கல்லூரி முதல் நாள், பக்கத்து வீட்டு அத்தை எதிர்த்த வீட்டு தாத்தா தன் பெற்றோர் என அனைவரிடமும் ஆசீர்வாதம் பெற்று விட்டு, தன் தந்தையுடன் பைக்கில் செல்கிறாள், மாங்கனி.” என்று கூறிவிட்டு தொண்டைக்கு நீர் பாய்க்சுகிறார் மாவட்ட ஆட்சியர் மாதவி.

பிறகு மீண்டும் மாங்கனியை பற்றி “மாங்கனியோ எளிதில் யாரிடமும் கோபம்கொள்ள மாட்டாள். அதே சமயம், அவளின் பெற்றோரை தவி, யாரிடமும் அடங்கி போகமாட்டாள். தனக்கு சரி எனப்படுவதை மட்டுமே செய்வாள். அவள் இப்படிபட்ட குணம் உடையவள் என்பதால், பள்ளியில் அவளிடம் யாரும் நண்பர்களாக இல்லை மாறாக எதிரியாகவே இருந்தனர். அவளின் குணத்தை புரிந்து, அவளை நண்பர்களாக ஏற்று கொண்டோர் இரண்டு நபர்கள் தான். அதில் ஒருத்தி மங்கை, இவள் மிகவும் மென்மையானவள். 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மாங்கனியும் மங்கையும் ஒரே வகுப்பில் தான் படித்தார்கள். மற்றொருத்தி

## தொலைந்(த்)த கதை..

தன் பள்ளி ஆண்டு விழா நிகழ்ச்சியில் அலைகடல் என திரண்டு இருக்கும் பள்ளி மாணவ மாணவிய் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொள்கிறார். உயர்திரு. மாவட்ட ஆட்சிய் மாதவி, தமழ்த்தாய் வாழ்த்து முடிந்ததும், அப்பள்ளி தலைமையாசிரியர் வரவேற்புரை வழங்க அதன் தொடர்ச்சியாக சிறப்பு விருந்தினரான மாவட்ட ஆட்சியர் மாதவியை சிறப்புரை வழங்க அழைத்தனர். முதலாவது வணக்கத்தை தன் தலைமையாசிரியரிடம் கூறிவிட்டு, இரண்டாம் கண் வணக்கத்தை, அங்கு அமர்ந்திருக்கும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கூறிவிட்டு, மூன்றாம் கண் வணக்கத்தை மாணவ, மாணவியரிடம் கூறிவிட்டு, தன் உரையை “எல்லாரும் எப்படி இருக்கீங்க?” என்று ஆரம்பித்தார். மாணவர்களிடமிருந்து சத்தம் வரவில்லை இன்னொரு முறை “மாணவர்களே உங்களைதான் கேட்கிறேன்... எப்படி இருக்கீங்க?” என்று ஆரம்பித்தார். மாணவர்களிடமிருந்து சத்தம் வரவில்லை இன்னொரு முறை “மாணவர்களே உங்களைதான் கேட்கிறேன்... எப்படி இருக்கீங்க?” என்றதும், மாணவர்களின் கூக்குரல் “நல்லா இருக்கோம் மேடம்” என்று இடி முழங்கியது போல இருந்தது.

விழாவில் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கும் நோக்கில் ”உங்க எல்லோருக்கும் ஒரு கதை சொல்லவா”? எனக்கேட்டார். மாணவர்களும் “சொல்லுங்க மேடம், சொல்லுங்க மேடம்” என்று ஆர்வத்துடன் கேட்டனர். “ஒரு ஊரில்” என அவர் கதையை தொடங்கியதும் பேரமைதி... அந்த அமைதி அவர் கதையை தொடர்ந்துக் கூற ஏதுவாக இருந்தது. “ஒரு ஊரில், ஒரு தாய் தந்தை இருந்தனர். அவர்களுக்கு ஒரே ஒரு மகள் தான்... அவளை கண்களை காக்கும் இமைபோல, காத்து வளர்ந்து வந்தனர். அவள் தாய் தந்தையரோ ஒரு நடுத்தர வருமானம் காணும் தம்பதியினர். அதனால் அவளை அரசு பள்ளியில் படிக்க வைத்தனர். அவளும் தன் தாய் தந்தை பேச்சை மறுக்காமலும் அவர்களிடம் ஏதும் மறைக்காமலும் பள்ளி வாழ்கையை செம்மையாக கடந்து வந்தாள்.

அவர்களோ தான் பள்ளி படிப்பை முடிக்கா விட்டாலும் தன் பிள்ளையை நன்று படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, எந்த கல்லூரியில் தன் பிள்ளையை சேர்க்கலாம் என, தனக்கு தெரிந்த



## தொலைபேசியில் தொலையாதே



**எஸ். சோபனா**

இளம்

சுவாசம் கொடுக்கும் காற்று...
பழங்கள் கொடுக்கும் மரங்கள்...
கதிர் கொடுக்கும் கதிரவன்...
மழை கொடுக்கும் வானம்...
நீரை கொடுக்கும் நிலம்...
உயிரை கொடுக்கும் தாய்...
வளத்தை கொடுக்கும் தந்தை...
பாசத்தை கொடுக்கும் பெற்றோர்...
உரிமையை கொடுக்கும் உடன்பிறப்பு...
நட்பைக் கொடுக்கும் நண்பன்...
இவை அனைத்தையும் கொடுக்கும்...
பல வலிகளும் கொடுகின்றன...

பண்பாடு இப்போது பெரும்பாடாக இருக்கிறது
இலக்கியம் எல்லாத்தையும் இழந்து இருக்கிறது...
தமிழ் இப்போது தனிமையில் தனியாய் இருக்கிறது...
சுற்றிப் பார்க்கும் உலகம் சுழன்று கொண்டு இருக்கிறது...
விலங்குகள் இப்போது விளித்து கொண்டு இருக்கிறது...
மனிதன் இப்போது மனிதத்தை மறந்து கொண்டு இருக்கிறது...


**மு. சேதுலெட்சுமி**
இளம் கணினிப் பயன்பாட்டியல் (இடை)

புன்னகை என்னும் பூ மலர்ந்தால்
இங்கு பல சூர்ப்பணகைகள் கூட
சீதைகளாகி விடுவார்கள்

**உமாதர்ஷினி**
இளம்



**ஆயிரம் கரங்கள் உன்னை அழிக்கவந்தாலும்**
**உன் தந்தையின் கரங்கள் உன்னைக் காக்கும்**



**ச. இலக்கியா**
இளம் (நிறை)

## நட்பு

ரோஜா என்றால் முல் உண்டு
வான் என்றால் மதி உண்டு
மலர் என்றால் தேன் உண்டு
அதுபோல்
நட்பு என்றால் நம்பிக்கை உண்டு

## உடன்பிறவா உயிர்

உன்னுடன் இரத்தத்தை பகிரவில்லை
எனினும் அன்பை பகிர்ந்துகொண்டோம்
உன்னை வீட்டில் சந்தித்ததில்லை
என்றும் ரோட்டில் தான் சந்தித்தோம்
ஆனாலும்,
உன்னையும் என்னையும் இணைத்தது
நம் சகோதர சகோதரி என்ற பாசம்!

**எஸ். சிவசுந்தரி**
இளம் உயிர்த் தொழில்நுட்பவியல் (நிறை)

காலம் மாறினாலும் குணம் மாறாமல் இருந்தலே நன்று.



யாரும் இல்லை என்று
கவலை கொள்ளாதே!
என்றும உன்னை
தனியாய்
தவிக்கவிடமாடேன்
ஏனெனில் உன் மன
பாரமும் துன்பமும்
நான் அறிவேன்
நீ என்னை வெறுத்தாலும்
நான் உன்னை விட்டு
விலகாது இருப்பேன்
என்றும் உன் நினைவிலும்
நினைவுகளோடு கலந்தும்....
– இப்படிக்கு உனது தனிமை

உன் கருவறையில் இருந்த
போது எனது உலகம் இருளாய் இருந்தது
நீ இல்லா இவ்உலகம் இருளில் இருப்பதாய் உள்ளது.
– அம்மா.

ஏன் பிறந்தேன் என்று
எண்ணிக்கொண்டு இருக்க
இருந்தேன்...
நான் இருக்கிறேன் என
துணையாய் வந்தாய்
அதுவரை பெறாத அன்பை
அவனின் சொற்கள் அள்ளித்தந்தன
ஏன் அவனோடு
பிறக்கவில்லை என்று
இப்பொழுது ஏங்க வைத்து விட்டான்.

**அ. ரக்ஷிதா**
இளம்



**ஆ. லெக்ஷ்மி பிரியா,** முதுகலை இரண்டாமாண்டு இயற்பியல்



## காகிதம் எனும் நான்

என்னை பற்ற என்மீதே எழுதுகிறேன்
நான் தான் காகிதம்!
நான் ஒரு மேடை
என்னிலிருந்தே அனைத்தும் வெளிப்படுகிறது
கவிஞரிடத்தில் கவிதையாகிறேன்
காதலனிடத்தில் காதல் கடிதமாகிறேன்
ஓவியரிடத்தில் ஓவியமாகிறேன்
மழலைக்கு மழைகாலத்தில் கப்பலாகிறேன்
மாணவரிடத்தில் மதிப்பெண் ஆகிறேன்
செய்திகளை அனுப்ப தந்தியாகிறேன்
பொட்டிகடையில் பொட்டலம் ஆகிறேன்
வியாபாரிகளுக்கு விளம்பரம் ஆகிறேன்
பல நினைவுகளை ஏந்தி குறிப்பேடாகிறேன்
நான் ஒன்று சேர்ந்தால் புத்தகம் ஆகிறேன்
பயனரிந்தோர் பயனடைவீர்!
பயனரியாதோர் பறக்கவிடுவீர்!!
என்னை மதிப்பரியாமல் தூக்கி எறிந்தால் உடனே மக்கிபோவேன்
என்னை மதிப்புகூட்டுவது உங்கள் பேனா மையே!
என்னை பற்றி கூறும் இக்காகிதத்திற்கும்
மதிப்பு கூடியுள்ளது!

**ஹ. ஆஃபிலா ஷெரீன்,**
இளம் உயிர்த் தொழில்நுட்பவியல் (முதல்)




**கா. நித்தியதர்ஷினி**
இளம் (முதல்)



# கோயில் கலைகள்

**முன்னுரை :**

இந்து சமயத்தவருக்கு உரிய வழிபாட்டு இடமான இந்துக் கோயில்கள் தொடர்பான கட்டிடக்கலை இந்துக்கோயில் கட்டிடக்கலை ஆகும். இந்து சமயத்தில் பல்வேறு கட்டிடக்கலைகள் இருந்தாலும் அவை அனைத்திற்கும் ஒற்றுமை உள்ளது. அதை பற்றிக் கட்டுரையில் காண்போம்.

**அம்சங்கள் :**

கர்ப்பக்கிரகம், கருவறை, அர்த்த மண்டபம், கலசம் முதலியவை அனைத்து இந்து சமயக் கட்டிடக் கலைகளிலும் பொதுவான அம்சங்களுள் சிலவாகும்.

**தோற்றம், ஆய்வு :**

இந்து சமயம் தற்போது வழக்கிலுள்ள பல சமயங்களுக்கு மூத்த சமயமாக இருந்தும், இதன் தோற்றம் எப்பொழுது நடைபெற்றது என்று தெரியாத அளவுக்குப் பழமை வாய்ந்த சமயமாக இருந்தும், இதன் அடிப்படையாகக் கருதப்படும் வேதங்கள் கி.மு. 1500க்கு முன்னரே தோன்றி இருந்தும், இன்று வரை நிலைத்திருக்கின்ற இச் சமயத்துக்குரிய கோவில்கள் பிற்பட்ட காலத்துக்குரியவையே. ஆரம்பகால இந்துக்கோயில் கட்டிடங்கள் பெரும்பாலும் அழிந்து போகக்கூடிய கட்டிடப்பொருட்களால் கட்டப்பட்டு இருந்ததாகக் கருதப்படுகின்றது.

**அமைப்புகள்:**

இக்கோயில்கள் ஒழுங்கான வடிவவியல் வடிவங்களான சதுரம், வட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி, பாதங்கள் எனப்படும் சதுர வலையமைப்பில் பல வேறுபாடுகளுடன் கூடிய திறந்த, சமச்சீரான வடிவமைப்புக்கொண்டவை. இந்துக் கோயிலொன்றின் முக்கியமான பகுதி கருவறை ஆகும். கோயிலுக்குரிய முதன்மைக் கடவுளின் உருவம் கருவறையிலேயே வைக்கப்பட்டிருக்கும். கருவறைக்கு மேல் கோபுரம் போல் அமைந்திருக்கும் அமைப்பு சிகரம் (அ) விமானம் எனப்படும்.

**மரத்தினால் செய்யப்பட்ட கோவில்கள்:**

தொடக்ககால கோவில்கள் மரத்தினாலேயே அமைக்கப்பெற்றன.

இவை மரத்தினை செதுக்கி அமைப்பதால் எளிமையாக இருந்தன. ஆனால் இயற்கை சீற்றங்களால் விரைவில் பழுதடைந்தன. மரத்தினால் செய்யப்பட்ட கோவில் விமானங்கள் மழையிலிருந்து பாதுகாக்கப்பட்ட செப்பு தகடுகள் போடப்பட்டன. சில அரசர்கள் கோவிலுக்கு தங்க தகடுகளும் வேந்தனர்.

இதற்கு சான்று சிதம்பரம் நடராஜர் கோவில். அங்கு சபாநாதர் மண்டபம், ஊர்த்துவ தாண்டவமூர்த்தி ஆலயம் போன்றவை மரத்தினால் செய்யப்படிருந்தவை, போலவே இருக்கும். சிதம்பரம் கோவில் விமானம் பொன்னால் செய்யப்பட்டது.

**செங்கற்கட்டிட கோவில்கள்:**

கி.பி. 600க்கும் மேல் கட்டப்பட்ட கோவில்கள் செங்கற் கட்டிடங்களால் கட்டப்பட்டன. மரத்தினால் ஆனா கோவில்கள் எளிதில் தீப்பற்றவும், பழுதடையும் வாய்ப்பு உண்டு. செங்கற் கட்டிடங்களுக்கு மேல் சுண்ணாபினை பூசும் வழக்கமும் இருந்தது.

**கட்டுமானப் பொருட்களின் அடிப்படை வகைபாடுகள்:**

இந்துக் கோயில்கள் கட்டுமானப் பொருட்களின் அடிப்படையில் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன மண் தளி, மரத்தளி, கற்றளி, குடைவரைக் கோயில் என்பனவாகும். அக்காலத்தில் மண் கொண்டு செய்யப்பட்டது. கட்டுமானப் பணிகளில் முன்னேற்றம் அடைந்த பிறகு மரம் மற்றும் செங்கல், சுண்ணாம்பினால் செய்யப்பட்டதாக கோயில்கள் மாறின.

**மண்தளிகள்:**

சுட்ட மண்ணைக் கொண்டு அமைக்கப்பட்ட கோவில்கள் மண்தளிகள் என்று அழைக்கப்பட்டன.

**முடிவுரை:**

அக்காலத்தில் உருவாக்கப்பட்ட, கட்டமைக்கப்பட்ட கட்டிடங்கள் தான் வரலாற்றின் அடையாளமாக இருக்கிறது. இக்காலத்தில் பல நவீன கட்டிமுறைகள் நடைபெற்றாலும் அக்கால இந்தி கட்டிட அமைப்பே சிறந்ததாகும்.

**இரா. செம்மொழி** முதலாமாண்டு இளங்கலை நுண்ணுயிரியல்.

செய்ய முடிந்தவன் சாதிக்கிறான் செய்ய முடியாதவன் சோதிக்கிறான்.



அலைக்கடலைப் போல பேருந்து நிலையத்திற்கு முன்னே மறியலில் ஈடுபட்டனர். அவளும் அந்த கடலில் அலையாய் தயாரானாள். இவர்களின் சாலை மறியலை முன்னே கணித்தது போல பேருந்து ஓட்டுநர் பேருந்தை பேருந்து நிலையத்தில் நிறுத்தாமல் சற்று முன்னே நிறுத்தி விட்டு ஒரு பார்வையுடன் கூடிய நமட்டு சிரிப்பினை சிரித்த வண்ண பட்டாம்பூச்சியான அம்மகளிர் கூட்டம் பேருந்து நோக்கி படையெடுத்தது இவளும் ஓடினாள் ஆனால் திடிரென்று ஏதோ தோன்ற நின்று விட்டாள். அந்த ஓட்டுநர் 5 வினாடிகள் நின்று விட்டு மகளிர் கூட்டம் நெருங்கியதும் அவர் பேருந்தை எடுத்து விட்டார். ஓடியவர்களின் முகத்தில் பெம் ஏமாற்றமே மேலோங்கியது. அந்த ஓட்டுநர் நிறுத்தத்திலும் பேருந்தை நிறுத்தாமல் அங்கு ஓரமாக நின்றிருந்த ஆண்களை மட்டும் ஏத்தி கொண்டு புறப்பட்டது. ஏனென்றால் பெண்களுக்கு தானே இலவசம் இவள் முகத்தில் ஏதோ சாதித்த பிரகாசம் ஏனென்றால் அது தினமும் நடக்கின்ற ஒரு விஷயம் தானே அந்த இலவச பேருந்து ஓட்டுநரின் நடவடிக்கையை பார்க்கும் போது இவளின் மனதில் எழும் கேள்வி “இந்த பேருந்து என்ன இவரின் அப்பாவின் சொத்தோ அதான் அரசாங்கத்தில் ஊதியம் குடுக்கிறார்கள் அல்லவா'' என்று மனதிற்குள் தினமும் எழுப்பும் கேள்வியை இன்றும் எழுப்பினால்.

**ர. இளவேனில்**
இளம்

# இலவசப் பேருந்தும் அவளும்

அடங்க மறுக்கும் கூட்டம் அந்த அந்தி வேலையில், சாலையைக் கடக்க முயற்சிக்கும் அந்த பட்டாம்பூச்சிகளின் வண்ணத்தில் சாலையே பிரம்மித்தது. கல்லூரி முடிந்து வீட்டிற்கு ஓடும் வேகத்தில் சிலர், பொறுமையாக சென்றுக் கொள்ளலாம் என சிலர், இதில் அவள் மட்டும் அண்மையாய். கல்லூரி வாசலில் சீறிப் பறந்துக் கொண்டிருந்தது. விதவிதமான வண்டிகள் சுற்றி இருப்போரை ஈர்ப்பதற்கான ஓர் ஆயுதமாய். ஆனால் அவளுக்கோ அது எரிச்சலை மட்டுமே ஏற்படுத்தியது. முதல் பேருந்து வந்தது ஓர் கூட்டம் ஓடிச் சென்று ஏறியது. அவள் அந்த பேருந்தில் ஓடிய பாட்டிற்கு சற்று நேரம் அடிமையாகி விட்டாள் போல அந்த பேருந்து சென்ற பின்பும் அதை முனுமுனுத்துக் கொண்டிருந்தாள்.

அடுத்த பேருந்து வரும் வரை. அது சந்து நின்றதும் அதில் ஒருக் கூட்டம் சென்று ஏறியது. அவள் அப்போது தான் கவனித்தால். அவளைப் போலவே சில பெண்கள் அவர்களின் தோழிகளுடன் இவளைப் போலவே எந்த பேருந்திலும் ஏறவில்லை என்று. இவளின் தலை தரையை உற்று நோக்கி கொண்டிருந்தது மண்ணில் புதைந்தவாறு ஒரு நாணயம் போன்ற ஒரு பொருளை இவள் காலால் எடுத்துக் கொண்டிருந்தால் அமைதியாக இருந்த அந்த சமயத்தில் விர்ரென்று ஒரு சத்தம் மாணவர்கள் வண்டிகளை வைத்து சாகசங்கள் செய்துக் கொண்டிருத்தனார் அவர்களின் மனவோட்டம் எல்லாப் பெண்களும் அவனைக் கண்டு ரசிக்கிறார்கள் என்று ஆனா அவள் மனதில் திட்டிக் கொண்டிருந்தாள் பெற்றவர்கள் காசில் வண்டியை வாங்கி அதனை தவறாகவும் பல வீர சாகசங்கள் செய்தும் யாருக்கும் என்ன லாபம் திடிரென்று ஏதும் அசம்பாவிதம் நடந்தால் பெற்றவர்களின் மனவோட்டம் எவ்வாறு இருக்கும் என இவள் ஆழ்சிந்தயைில் மூழ்கி விட்டாள் திடிரென்று ஒரு பேரிரைச்சல் இவள் தலை நிமிர்ந்துப் பார்த்தாள். இவளைப் போல நின்ற சில கூட்டங்களும் ஆரவாரம் ஆயின ஆம் அந்த சத்தம் இலவச பேருந்து சற்றும் கூட்டமில்லாமல் வந்தது. இது பெண்களுக்கான இலவச பேருந்து. பெண்களின் கூட்டம்



# விவசாயி

உயிர் உள்ள சீவிகளின் முதல் உருவம்
உலகிற்கே உணவளிக்கும் முதல் இறைவன்.
அதிகாலை எழுந்திடுவான் – அவன்
காளையோடு காலையனாய்
ஏர் முனையில் நின்றவனோ!
உலகிற்கே உணவளிக்க வியர்வை சிந்தி உழைத்திடுவான்?
ஏர்முனையில் நின்றவனோ!
உலகிற்கே உணவளிக்க வியர்வை சிந்தி உழைத்திடுவான்?
ஒட்டியவயிரோடு – அவனோ!
ஒற்றையானை உரம் கொண்டு
எருதுகளை தண்பனாக்கி
கருத்த நிறமாயினும் கனத்த நெஞ்சம் கொண்டு
பழைய சோறு ஆயினும் அமுதமாய் அவன் உண்டு
பட்டினியாய் கிடந்தாலும் பார்போற்றும் பகலவனாய்
உலக உயிர்களுக்கே உணவளிக்கும்
விவசாயத்தை ஏற்றிடுவோம்!
விவசாய பெருங்குடியை போற்றிடுவோம்!
வாழ்க விவசாய பெருங்குடி!

**இரா. செம்மொழி**
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

## அலைக்கற்றை

அன்றாட வாழ்விற்க்கு அலைக்கற்றை தேவை தானே!
ஆனாலும் அழிவின்பாதையும் அவன்தானே!
விஞ்ஞானம் பெருகுதென்று விண்ணுக்கே சவால் விட்டு
வியர்வை சிந்தி உழைத்திடாமல் விலைகொடுத்து – பல
நோய்கள் பெற்று : மூட்டை கணக்கில் மருந்துண்டு
வாழ்வை கடத்தும் – மானுடமே!
காக்கை குருவி சாகுதாமே!
அதையாவது கேள்வி பட்டதுண்டா?
சின்னஞ்சிறு பிஞ்சுகளை சிதைக்க இங்கே வந்தவனே!
இணையவழி வகுப்பெள்ளாம் கைபேசியில்
மணிக்கணக்கில் – உற்று நோக்கி
கண்பார்வை மங்குதிங்கே :
பட்டம்பல பெற்றானே !
அலைக்கற்றை இருந்ததாளா?
அலைக்கற்றை தேவைதானே ! ஆனாலும்
அதன் விழிப்புணர்வும் தேவை தானே !

**இரா. செம்மொழி**
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

## கவிதைகள்

இன்று உருகும்
மெழுகுவர்த்தியாக இருந்தால்
நாளை உயரம்
கலங்கரை விளக்காக ஒளிரலாம்!

புத்தகத்தின் பக்கங்கள் கலையப்படும்
போதுதான் மூளையில் அறிவு
அலங்கரிக்க படுகிறது...!

**ஹரிணி பிரியா**
இளம்





**ஆர். அட்சயா**
இளம்

## கபடி

களத்தை அதிர வைக்குமாறு
ரசிகர்களின் ஒளி
இடியைப் பிடித்து நிற்க செய்தவாறு
அரங்கத்தின் ஒளி
ஏழு பேர் ஆடும் ஆட்டம் இது...
சதுரங்க கோட்டுக்குள் சமமாய்
எதிர்க்கும் வீர விளையாட்டும் இது
வீர நடைபோட்டு
ஆடுகளத்தை வட்டமிட்டு
தீப்பொறி கொண்ட கண்களுடன்
மண்ணைத் தொட்டு
முத்தமிட்டு வணங்கி
எமனையே எதிர்ப்பது போல்
எதிரே நிற்பவர்களை
தோற்கடிக்க நெஞ்சை நிமிர்த்தி
நேருக்கு நேர் சென்று
மூச்சை இழுத்துப் பிடித்து
கபடி கபடி என கர்ஜித்து
நான்கு கோட்டுக்குள்
சுற்றி வளைத்து
தோற்கடிக்க முயலும் போதும்
சீறிவரும் காளை போல
கோட்டைத் தொட்டு
கொடினாட்டும் ஆட்டம் இது.
கபடியை உயிராக நினைக்கும்
வீரர்களுக்காகவும்...
கபடிக்காக உயிரை கொடுத்த
வீரர்களுகாகவும்...

**ரா. சந்தியா**
இளம்

## மழலையின் மனம்

மொழியரியா உன் முகதின் சிரிபிற்கு
என்னையரியா அடிமையாகிறேன்
தத்திதத்தி நடக்கும் உன் அழகி
நடைக்கு பித்தேரி போனேன்
கண்சிமிட்டும் என் கற்கண்டே
கையில் கிடைத்த புச்செண்டே
மொழிகள் இல்லையடி உன்
மௌனங்களை வர்ணிக்க

**இ.சுபிக்ஷா**
இளம்

உதிரும் பூப்போல் இல்லாமல் உறுதியான விதைப்போல் இருங்கள்.






**ஸ்ரீ. ஸ்ரீநாத்,** இளம் வணிகவியல் (முதல்)

ஒரு நாள் மாலைப்பொழுதில் கல்லூரி முடிந்து வீட்டுக்கு செல்லும் நான்கு நண்பர்கள் பேசிக்கொள்கின்றனர். அவர்களின் பெயர் அருண், சிவா, பிரசாத் மற்றும் கண்ணன். இவர்கள் நால்வரும் பள்ளிப்பருவத்திலிருந்து ஒன்றாக படிப்பவர்கள். இவர்கள் நால்வருக்கும் சுற்றுலா செல்வது மிகவும் பிடிக்கும். இவர்கள் கல்லூரி வாழ்க்கை நிறைவு பெற வருவதால் அடுத்து வேலை தேடி பல இடத்திற்கு சென்று விடுவோம் என்று நால்வரும் சுற்றுலா செல்ல முடிவு செய்கின்றனர்.

அவர்கள் ஊட்டிக்குச் செல்லலாம் என்று முடிவு செய்கின்றனர். அவர்கள் முடிவு செய்ததுபோல் அங்கு சென்று சுற்றிப்பார்த்துவிட்டு வீடு திரும்புகின்றனர். ஒரு காவலர் “அவர்களது காரை மறைத்து இந்த பக்கம் ஒரு போராட்டம் நடைபெறுகிறது.” அதனால் இந்த சாலையில் சென்றால் ஒரு மலையைத் தாண்டி தாங்கள் மீண்டும் இந்த சாலையில் இணைந்துவிடலாம். என்று கூறி அந்த சாலையை காண்பித்தார். அவர்கள் அந்த சாலையில் சென்று கொண்டிருந்தபோது இருள் மேகங்கள் சூழ்ந்து அதீத மழை பெய்ய ஆரம்பித்தது, அதனால் மெதுவாக காரை ஒட்டிக்கொண்டு சென்றனர். இவர்களுக்கு பின்னால் நீண்ட தூரத்தில் இரண்டு கார்கள் மின்வினக்கை எறியவிட்டப்படி வந்துகொண்டிருந்தது. சட்டென்று அவர்களின் கார் முன்னே யாரோ சென்றது போலிருந்தது. அருண் உடனே காரை நிறுத்தினான் அவர்களின் அருகே வந்த நபர் “நான் இந்த பகுதியை சேர்ந்தவன் வெளியில் கடைக்கு பொருட்கள் வாங்க வந்தேன்”. மழையினால் மீண்டும் செல்லமுடியவில்லை. நீங்கள் என்னை வீட்டில் இறக்கிவிட முடியுமா. என்று கேட்டார். அவர்களும் அவரை ஏற்றிக்கொண்டனர். அந்த நபர் நீங்கள் எங்கே செல்கிறீர்கள் என்று கேட்க, சிவா அவர்கள் சுற்றுலா வந்தது,நடந்தது எல்லாவற்றையும் கூறினான். “நான் ஒரு அரண்மனையில் வேலை பார்க்கிறேன். அங்கு யாரும் இல்லை நீங்கள் வேண்டுமானால் அங்கு வந்து தங்கிக்கொள்ளலாம் என்று கூறினார். அருணும் அந்த மழையில் கார் ஒட்டுவது கடினமாக இருந்ததால் அதை ஏற்றுக்கொள்கிறேன். அருண் “வண்டியில் பெட்ரோல் பேங்க்



மாலதி அவைகளை வாங்கி கொண்டு ரூபாய் ஆயிரத்திற்கு மருத்துவ செலவுகளையும் செய்து மறுபடியும் அத்தையை ஆட்டோவில் ஏற்றி வீட்டிற்கு வருகிறாள்.

பாப்பா, உனக்கு எவ்வளவு சிரமம் கொடுத்துவிட்டேன் என்றால் அத்தை. இக்கட்டான நேரத்தில் தூய்மையான இதயத்தோடு உதவி செய்த மாலதியை நினைத்து நெகிழ்ந்து போனால். நாம் காலையில் 50 ரூபாய் கொடுக்க மணம் இல்லாமல் இறக்கமற்றவளாய் இருந்ததை நினைத்து மணம் வெம்பி தனது குற்ற உணர்வு அவளை சீர் குளைய வைத்தது. பின் மாலதியிடம் எவ்வளவு செலவு ஆக்கியிருக்கும். இதுல ரூபாய் ஆயிரம் இருக்கு இத வைத்துக் கொள் என்றால். அதற்கு மாலதி வேண்டாம் அத்தை என்னிடம் பணம் இருக்கு கல்லூரியில் கல்வி உதவித்தொகை கொடுத்தாங்க. அந்த பணத்தைத்தான் செலவு செய்தேன் சரி நான் வருகிறேன். உங்கள் உடல்நிலையை பார்த்துக்கொள்ளுங்கள் என்றாள் மாலதி.

தான் பெரிய தவறு செய்துவிட்டோம் என்று எண்ணி மிகவும் மணம் வருந்தினால் அத்தை, காலையில் பணம் இருந்தும் கொடுக்க மணம் இல்லாமல் குறுகிய புத்தியுடன், ஈவு இரக்கம் இன்றி இருந்து விட்டோமே!

மாலதி சிறிய வயதிலும் பெருந்தன்மையுடன் நடந்துக்கொண்டால், ஆனால் நாம் வயதில் பெரியவளாக இருந்தாலும் சிறு பிள்ளைப்போல் நடந்து கொண்டதை எண்ணி உடல் வலியை விட அவளின் உள்ளத்தின் வலி அதிகமாக இருந்தது.

பணக்காரனோ, ஏழையோ யாருக்கும் எந்த நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். எந்த நேரத்திலும் எவரின் உதவியும் தேவைப்படலாம். நாம் வாழும் வரை மனித நேயத்துடன் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம்.

**இ. சுபிக்ஷா**
இளம் கணினிப் பயன்பாட்டியல் (முதல்)

வெற்றியாளர்கள் விலகுவதில்லை, விலகுபவர்கள் வெற்றிப் பெறுவதில்லை.

# மனித நேயம்

கல்லூரிக்கு செல்ல புறப்பட்டுக்கொண்டிருந்தாள் மாலதி. நான் கல்லூரிக்கு போய்ட்டு வரேம்மா! என்று கூறி சைக்கிளை எடுத்தால் மாலதி. அச்சோ! சைக்கில் காற்று இறங்கி பஞ்சர் போலயிருக்குமா! இப்ப எப்படிமா கல்லூரக்கு போவே! என்றால் அம்மா (இந்திரா). அதற்கு மாலதி சரி ஐம்பது ரூபாய் கொடு நான் பஸ்ஸில் போகிறேன் என்றாள். இதற்கு அம்மா (இந்திரா) என்கிட்ட ஏதும்மா, அப்பா தான் சம்பாதிக்குற பாதி பணத்தை குடிச்சே அழிக்கிறாரே! எதிர் வீட்டு அத்தையிடம் கேட்டு பார்மா என்று கூற, மாலதி மிகவும் சோகத்துடனும், தயக்கத்துடனும் அத்தை 50 ரூபாய் பணம் அம்மா கடனாக கேட்டாங்க நாளைக்கு தராங்களாம் என்று சொல்ல அந்த எதிர்வீட்டு வசதியான அத்தை என்னிடம் காசு இல்லம்மா இருந்த காசுக்கு காய்கறி வாங்கிட்டேன் என கூற, மாலதி பெருந்தன்மையுடன் பரவாயில்லை அத்தை என்று கூறிவிட்டு வீடு திரும்பினால், அப்போது தொலபேசியில் அழைப்பு வந்தது. ஏன்டி மாலதி எவளவு நேரம் வைட் பண்றது. எப்ப வருவே என்றால் மாலதியின் தோழி மீனா, சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டது மீனா. பஸ்ஸில் வருவதற்கும் என்னிடம் பணம் இல்ல டி.

மீனா உடனே பரவாயில்ல டி நான் பணம் வைத்திருக்கிறேன். நீ வாடி என்றாள். மாலதி உடனே இம் சரி மீனா என்று கூறி கல்லூரிக்கு சென்று திரும்பும் வழியில் பேருந்து நிலையம் அருகே ஒரே கூட்டம் மீனா ஏதோ விபத்து போல யாரோ அடிப்பட்டு கிடக்கிறாங்க உடனே மாலதி எட்டிப்பார்க்கிறாள். அச்சோ! இவங்க எங்க எதிர் விட்டு அத்தை யாரோ மோட்டார் பைக்கில் வந்தவன் விட்டு அடிச்சிட்டான். அத்தை என்ன ஆச்சி என்றால் மாலதி, அழுதுக்கொண்டே அத்தை மோட்டார் பைக்கில் வந்தவன் என் மேல விட்டு மோதிட்டாம்மா!

மாலதி சற்றும் தாமதிக்காமல் மனிதநேயத்துடன் அத்தைய ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள். அங்கு மருத்துவர் அத்தையின் காலில் கட்டு போட்டு லேசான காயம் தான் என்று கூறி சில மருந்து மாத்திரைகளையும் கொடுத்தார்.

சோர்ந்தவர்கள் வெற்றி பெறுவதில்லை, வெற்றியின் பக்கம்
சேர்ந்தவர்கள் சோர்வதில்லை.



இருக்கா என்று கேட்டான்." இப்பகுதியில் பெட்ரோல் பேங்க் இல்லை நீண்ட தூரம் செல்ல வேண்டும் என்று பேசிக்கொண்டே அரண்மனையை அடைந்தனர்.அது மிகவும் பிரகாசமாகவும், பெரியதாகவும் இருந்தது. அந்த நபர் அந்த இடங்களை சுற்றிக்காட்டிவிட்டு "நீங்கள் சாப்பிடவில்லை என்று நினைக்கிறேன் எனக் கூறிவிட்டு உணவு உண்ணும் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு புகைப்படம் இருந்தது அதைப் பார்த்த அருண் பேரதிர்ச்சி அடைகிறான். அந்த புகைப்படத்தில் இருப்பவர் இவர்களின் அருகில் உள்ளவர்.

அந்த புகைப்படத்தில் அவருடைய காலத்தை 1818 முதல் 1875 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இவனின் மற்ற நண்பர்களை அழைத்து காண்பித்துவிட்டு அவரை பார்த்தால் அங்கு அவர் இல்லை அந்த இடம் முழுவதும் இருள் சூழ்ந்து அந்த இடம் மிகவும் பழைய அரண்மனையாக மாறியது. அவர்களுக்கு அங்கிருந்து எங்கே செல்வது என்று தெரியவில்லை சிவா அவனிடமிருந்த டார்ச்லைட் அடித்து எங்கே செல்வது என்று யோசித்துக்கொண்டிருக்க பிரசாத் "மாடியில் ஏதோ வெளிச்சம் தெரிகிறது சென்று பார்க்கலாம் வாங்க" என்று அழைக்கிறான். அந்த இடத்தின் நிலவின் வெளிச்சம் நேரடியாக பட்டுக்கொண்டிருந்தது. அங்கு ஒரு கதவு இருந்தது. அதற்குள் என்ன இருக்க என்று பார்க்க அவர்களின் ஆர்வம் தூண்டியது. அவர்கள் அந்த கதவைத்தல்ல. அது திறந்துகொண்டு நான்கு மூலைகளிலும் சிதறி விழுந்தனர். சிவாவின் கையில் இருந்த டார்ச்லைட் கீழே விழுந்துவிட்டது. அதைத் தேடும்போது அருணுக்கு ஒரு புத்தகமும், பிரசாத்துக்கு ஒரு வாளும் கிடைத்தது. ஒரு வழியாக சிவா டார்ச்லைட்டை எடுத்து அடித்தான் கண்ணன் ஆஆஆ.... என்று கத்தினான். அவர்கள் திரும்பிப் பார்க்க அங்கு ஒரு கல்லறை இருந்தது.


அருண் அந்த லைட்டை வாங்கி அந்த கல்லறையில் மீது தங்கத்தகட்டில் பொறிக்கப்பட்டிருந்ததை படித்தான். "இந்த வாளை எடுப்பவரின் இரத்தம் கட்டாயமாக இக்கல்லரையில் படும்." என்று

எழுதியிருந்தது. இதை அறியாத பிரசாத் அந்த வாளை தூக்கி வீச, அந்தவாள் சுழன்று வந்து அவனது கையை வெட்டியது அவனுடைய இரத்தம் அக்கல்லறையில் சிந்தியது அவன் வலியில் துடிக்க, அவர்கள் பயத்துடன் அந்த இடத்தை விட்டு வெளியே செல்ல வேண்டும் என்று அவனையும் அழைத்துக் கொண்டு ஒடினார். திடீரென்று அவர்களின் முன்னாள் ஒரு நபர் வந்து நீங்கள் யார் என்று கேட்டார்? உடனே கண்ணன் நீங்கள் யார்? இங்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்டான். அதற்கு அவரோ நான் இந்த ஊரைச் சேர்ந்தவன் தான், எங்கள் ஊருக்குச் செல்லும் ஒரே பாதை இது தான். மக்கள் இவ்வழியே செல்ல பயப்படுவதால் தினமும் ஊரிலிருந்து ஒருவர் இங்கு காவலுக்கு வருவோம் அப்படித்தான் நான் இன்று இங்கே வந்தேன், ஏதோ சத்தம் கேட்கிறதே என்று உள்ளே வந்தேன் எனக்கூறினான். கண்ணனும் நடந்தது எல்லாவற்றையும் கூறி எப்படியாவது எங்களை இங்கிருந்து அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினான். அவரோ என் பின்னால் வாங்கள் என்று அழைத்துச்செல்ல முன்னே சென்று கொண்டிருந்த நபர் சட்டென இருளில் மறைந்தார். இவர்கள் வேகமாக ஓட, அருணின் காலில் ஏதோ இடித்தது. அருண் அதை கையில் எடுத்தான்

அது அவர்களின் முன்னே சென்றவரின் தலை சிவா 'ஐயயோ' அது மனுஷன் இல்லை 'பேய்' என்று கத்தினான். அவர்கள் வந்து வந்த வழியில் திரும்ப ஒடிவர கண்ணன் எல்லோரும் நின்னுங்க நம்ம கார் இங்கே தெரிகிறது. உடனே அருண் நமக்கு வேறு வழி இல்லை.வாங்க இப்படியே இறங்கிடலாம் என்று கூறி மாடியிலிருந்து சன்னல் வழியாக இறங்கினான். ஒவ்வொருவராக இறங்கும் போது கண்ணன் அங்கிருந்து விழுந்து கால் அடிபட்டு விட்டது. சிவா கண்ணனை தூக்கிக்கொண்டு இந்த இடம் அமனுஷ்யம் நிறைந்ததாக இருக்கிறது. என்று கத்திக்கொண்டு காரை நோக்கி ஒடினான். அனைவரும் காரில் ஏறிட அருண் காரை ஸ்டார் செய்தால் , கார் ஸ்டார்ட் ஆகவில்லை எதிர்பாராத விதமாக அவனது கண்கள் பெட்ரோல் அளவை பார்த்தது அது முழுவதும் நிரம்பியிருந்தது



# பெண்கள் கோலம் போடுபவர்கள் அல்லர் பல்வகை கோப்பைகளை வெள்பவர்கள்



**க பரமேஸ்வரன்**
இளம் வேதியியல் முதல்

## ஊக்குவிக்கும் துணைவி

அறிந்த முகங்கள் சில
அறியாத முகங்கள் பல
இவ்விரண்டிருக்கு இடையில் என்
இதயத்தில் குடியிருந்த பூ நீ,
உன்னை பற்றி நினைத்ததோ வேறு... ஒன்று,
ஆனால் உன்னில் பழகிய பின் என் மனம் புரிந்தது தவறு என்று,
அதற்குபின் உன்னுடன் கதைக்க விரும்பினேன் அன்று,
ஆனால் உன்னால் கதை நாயகியாக நின்றேன் இன்று,
உன்னுல் இருப்பதோ பற்பல தமிழ் சொற்கள்,
அதுனால் என்னவோ உன் வாழ்வில் ஏறினாய் பல படிகற்கள்.
உன் வாழ்வில் சந்திபாய் பல புதிர்கள்,
அதுவின் பதிலாகவே இருக்கும் உன் **இதழ்கள்**

**எஸ். கிருஷ்ணவேனி**
இளம்

## மாசுபாடு


தொழிற்சாலையின் புகை மண்டலமும்
டீசல், எரிவாயுகளின் வாசமும்
கலந்த காற்றில்
இன்னிசை ராகம் ஒலிக்க செய்கிறது...

**ஆர். புவனேஷ்வரி**
இளம்



போல் காட்டியது. அருண் நாம் தான் பெட்ரோல் நிரப்பவிள்ளையே என்று யோசித்துக்கொண்டு வெளியே வந்து காரின் டேங்கை திறந்தால், அதிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கியது. அதனைக்கண்ட அருண் எல்லோரும் காரை விட்டு இறங்குங்கள் கார் பேங்கிலிருந்து இரத்தம் வழிகிறது என்று கத்தினான். அனைவரும் இறங்கி அங்கிருந்து ஓட, சட்டென ஒரு சுழல் காற்று அவர்களை சூழ்ந்து அவர்களை மயக்கமடையச் செய்தது. அவனை யாரோ எழுப்புவது போல் இருந்தது. கண் விழுத்து பார்த்தாள் அது அவனது அம்மா என்னடா ப்ரெண்ஸொட டூர் போகனும்னு சொன்ன இவ்வளவு நேரம் தூங்குர எழுந்திரு அருணுக்கு ஒன்னும் புரியவில்லை. இங்கு என்ன நடக்கிறது நம்ம தான் அங்க போய்ட்டோமே ஒரு வேளை அது கனவா” என யோசித்துக் கொண்டு கண்ணாடிக்கு முன் சென்றான். அப்போது அவனுது போன் உறுமியது. அது அவனது நண்பன் சிவா. டேய் அருண் பிரசாத்துக்கு கை வெட்டுப்பட்டிருக்கு, கண்ணுக்கு கால் அடிப்பட்டுட்டு அதனால் டூர் கேன்சல் பண்ணிடுவோம்.” என்று கூறி வைத்துவிட்டான். அவன் ஒன்றும் புரியாமல் தலையைப் பிச்சிக்கொண்டு போன் சார்ஜர் எடுக்க பையை திறந்தால். அதற்குள் ஒரு புத்தகம் இருந்தது. இது கனவில் பார்த்த புத்தகமாச்சே அதை எடுத்து படிக்க திறந்தான். அவனுக்கு டீ கொண்டு வந்த அம்மா அவனிடம் “என்னடா உங்க தாத்தா போட்டோ இதுல இருக்கு” என்று கேட்க அருண் அவன் அம்மாவை பார்க்கிறான். அருண் யார்? அவன் தாத்தாவின் புகைப்படம் ஏன் அங்கு இருக்கிறது.அருணின் வரலாறு என்ன? காத்திருங்கள் பாகம் – 2 வரை.

**மோ. சதீஷ்**
இளம் (முதல்)




**எஸ். பிரியதர்ஷினி,** இளம் (முதல்)



# இளந்தூது

நம்மை சுற்றி இருக்கும்
பல புதிர்கள்,
அதற்கு பதிலாகவே இருக்கும்
இவ்வறையின் **இதழ்கள்**
அனைவரும் ஒன்று சேர்ந்தால் அவ்விடத்தில்
வரும் கலகலப்பு,
அதுவே எங்கள் குடும்பத்தின்
முதல் **சிறப்பு**
மாணவர்கள் என்ற நினைவை
தொலைந்து,
உறவுகள் என்ற பல இன்ப
**உணர்வை** அழைத்து.
இயற்கையின் அழகோ
பகல், இரவு
இக்குடும்பத்தின் அழகோ
**அண்ணன், தங்கை** உறவு,
அக்காலத்தில் காதலர்கள் பேசி
கொள்ள உதவுவது தூது,
இங்கு இருப்போரின் பல கனவுகளை
உணர்த்துவதோ **இளந்தூது.**

# உறுதி கொள்

உன்னை விட யாரும் உனக்கு
நல்லவன் அல்ல
மற்றவர் கண்களுக்கு நீ நிறுபிக்க
அவசியமும் அல்ல
நீ தேர்ந்தெடுக்கும் பாதையை
உறுதி செய்
நீ முன்னெடுக்கும் செயலை
துனிந்து செய்
துயரத்தில் நீ சிந்தும் கண்ணீரை
உனக்கூள் வை
தூரத்தில் நிற்கும் உன் கனவை
மனதில் வை
நீ முன்னேர படிகளை
செதுக்காதே
பலர் செய்திடும் கேளிஉன்னை
செதுக்கட்டும்
முடிவில் உறுதி கொள் – உன்னை
உயர்த்தி கொள்

**செ. பிரியதர்ஷினி**
இளம்



# கல்வி கற்க ஒரு வித்தை

## “கடின உழைப்பு”

**குறிப்புச் சட்டகம்** :

- முன்னுரை
- படிப்பின் நோக்கம்
- படிப்பிற்கான ஏழு படிகள்
- முன் தயாரிப்புச் செய்யுங்கள்
- நினைவில் நிறுத்தும் முறைகள்
- மறதிக்கான காரணங்கள்
- முடிவுரை
- கவிதை

**முன்னுரை:**

❖ கெட்டிக்காரத்தனம் என்பது, ஒரு பங்கு அறிவும் தொண்ணூற்று ஒன்பது பங்கு கடின உழைப்பும் சேர்ந்தது, இக்கட்டுரையில் படிப்பின் நோக்கம், ஏழு படிகள், முன் தயாரிப்பு, நினைவில் நிறுத்தும் முறை, மறதிக்கான காரணங்களை தெரிந்து தெளிவோம்.

**படிப்பின் நோக்கம்** :

❖ மனநிலையில் மாற்றம், அறிவு நிலையில் உயர்வு, திறனில் மேம்பாடு உள்ளிட காரணங்களால் படித்து கொள்கிறோம்.

எப்படி என்பதற்குப் பதிலாக “ஏன்” என்று கேட்டுப்பாருங்கள் ஏன் என்பது முடிவனால் “எப்படி” என்பது தெளிவாகும்.

**படிப்பிற்கான ஏழு படிகள்** :

❖ முதல் படி : வாசித்தல்( சநயனைபே) பாடத்தைப் படித்தல்

❖ இரண்டாம் படி : நினைவில் வைத்துக்கொள்ளுதல் (சநஅநஅநெசபைே) படித்தவற்றை நினைவில் பதிய வைத்தல்

❖ மூன்றாம் படி : வெளிப்படுத்தல்( சநிசடினரஉபைே) படித்தவற்றை நமது சொந்த நடையில் சொல்லிப் பார்த்தல், எழுதிப் பார்த்தல்.

❖ நான்காம் படி : ஞாபகப்படுத்திப் பார்த்தல் (சநஉயிடவரடயவயைபே) நினைவில் பதிய வைத்ததை மீண்டும் ஞாபகத்திற்குக் கொண்டு வருதல்.

❖ ஐந்தாம் படி : ஒப்பிட்டுப் பார்த்தல் (சநகநசசயைபே) எழுதியதைப் புத்தகத்தோடு சரி பார்த்தல்

❖ ஆறாம் படி : திருத்துதல் (சநஉவ்கலயைபே) எழுதியவற்றில் உள்ள பிழைகளைத் திருத்துதல்.

❖ ஏழாம் படி : மறுமுறை வாசித்தல் ( சநஎளையைபே ) ஏற்கனவே படித்தவற்றைத் திருப்பிப் பார்த்தல்.

**முன் தயாரிப்புத் செய்யுங்கள்** :

சுத்தமான காற்றோட்டம், ஒளி அமைப்பு, படிக்கும் இடம், உட்காரும் நிலை – 90 டிகிரி செங்குத்து நிலை, படிப்பதற்கு முன் வயிறு நிறைய வண்ணாதீரகள், பசியோடு படிக்காதீர்கள், காலை நேரப் படிப்பு, குறிப்பேடு, புத்தகங்களின் மேலட்டை.

தண்ணீர் சிறிது அளவு அருந்த வேண்டும், படிக்கும் அறை – இடது புறமாக வைக்க வேண்டும் ! சுருக்கிப்படுத்திப் படியுங்கள், முக்கியப் பகுதியை தெரிவு செய்து படியுங்கள் – முக்கியமான வினாக்கள், எழுதிப்படியுங்கள் , குழு படிப்பு.

## நினைவில் நிறுத்தும் முறைகள்

**வாதப் பொருத்தமுறை** (Logical Memory)


ஒன்றை மற்றொன்றோடு தொடர்புப்படுத்தி நினைவில் நிறுத்துவது பழக்கம் (Habit)

தொடர்ந்து செய்யும் எந்தச் செயலையும் நம்மால் மறக்க முடியாது, எனவே தினமும் படித்தல் வேண்டும் அதுவாகவே பழக்கமாகிவிடும்.

**சம்பந்தப்படுத்துதல்:**

× இவ்வாறு ஒன்றை மற்றொன்றோடு நாம் சம்பந்தப்படுத்தி நினைவில் நிறுத்திக்கொள்ளலாம். எ.கா 1=5,2=25,3=125,4=625,5= ? என்றால் அனைவரும் உடனடியாகப் பேனாவை எடுத்துக் கணக்குப் போட ஆரம்பிப்போம், ஆனால் 5 என்ற எண் வேறு இடங்களில் பயன்படுத்தப் பட்டு உள்ளனதா என்பதைக் கவனிக்க வேண்டும் முதலில் 1=5 என்றால்5=1 என்பது சரி






**ப. வைரலட்சுமி** இளம் (முதல்)

## கல்வி

நிரந்தமில்லா உலகில்
நிரந்தரமான ஒன்றே நீ....
தடுமாறும் போதெல்லாம்
என்னை
தடம் பதிக்க வைக்க தோல் கொடுப்பவன் நீ...
வாயில் இருந்து வார்த்தைகள்
வராமல் இருக்கையில்...
உரிமைக்காக குறள் கொடுக்க
தூண்டியவன் நீ...
செல்வம் மிக்க உள்ளவர் இடையில்
உன்னால் அறிவு மிக்க வனாய்
உள்ளேன்...

**க. குகலஷ்மன்**
இளம்

## கற்பனை

உன் உலகைப் போன்ற உலகு வேறு உண்டோ!
நீ இருந்தால் போதும் எனக்கு பிடித்தற்போல் உலகை மாற்றுவேன்.
தனிமையில் இருப்பவருக்கு தோழன் என்றால்,
வறுமையில் இருப்பவருக்கு வழிகாட்டி.
உன்னை விரும்பி சிலர் பேனாவினைப் பிடித்ததால்
பொங்கி எழுந்தாய் கவிதையாக.
உன்னுடன் நட்புக் கொண்டதால் பல அறிஞர்கள்
பல கண்டு பிடிப்புகளைக் கொண்டு வந்தனர்.
உன்னை வீழ்த்த உன் எதிரி கூட உன்னை நாடுவான்
உயிரற்ற கல்லைப்போல் இல்லாமல், உயிருள்ள
நெல்லைப்போல் இருப்பதால் படைப்புகளும், காவியங்களும்
விளைந்தன. வேறென்ன, உன்னைப் பற்றி கவிதை
எழுத என்னையே தூண்டினாய் கற்பனையே!

**மு. கார்த்தி** இளம் வேதியியல் (முதல்)



**திட்டமிட்டுச் செயல்படுதல் :**

அட்டவணை படி நடத்தல், ஒவ்வொரு அரைமணி நேரம் படிப்பிற்கு பின்பும் 5 நிமிடம் ஒய்வு தரப்பட வேண்டும்.

**வகைப்படுத்துதல் :**

ஓர் இடத்தில் உள்ள அனைத்துப் பொருட்களையும் நாம் வகைப்படுத்தும்போது அவை நம் மனதில் நிலைத்து நிற்கும் எ.கா மரம் என்றவுடன் கிளை, இலை, பச்சை, நிறம் போன்றவை நம் நினைவுக்கு வரும்.

**பயன்படுத்துவது :**

நாம் படித்ததை நம் நண்பர்களுக்கு சொல்லி கொடுப்பதன் மூலம் நமது நினைவாற்றல் அதிகரிக்கும்.

**நினைவில் வைத்து கொள்ள :**

படங்கள், ஒவியங்கள், வைத்து நினைவில் வைத்துக் கொள்ளுதல்.

## மறதிக்கான காரணங்கள்

**பயம்** (Fear)

அதிக மதிப்பெண் எடுக்காவிட்டால் என்னாவது என்று கற்பனை செய்வது பயத்தை உருவாக்கும். இது நாம் ஆற்றலைக் குறைத்துவிடும்.

**பதற்றம்** (Tension)

முன்கூட்டியே படிக்கத் துவங்க வேண்டும். கடைசி நேரப் படிப்பு நமது பதட்டத்தை தூண்டி நம் நினைவாற்றலை குலைத்துவிடும்.

**விருப்பமின்மை** (Lack of Intersest)

விருப்பத்துடன் படித்தால் அது நினைவில் நிற்கும். நாம் பாடங்களை நேசித்தால் அவை நமது மனதில் இருக்கும்.

**தெளிவில்லாத நிலை** (Weak Impression)

நாம் படிக்கும் பாடம் தெளிவாக அதன் அர்த்தம் உணர்ந்து படிக்க வேண்டும். பயன்படுத்தாமல் இருப்பது , திருப்புதலற்ற வாசிப்பு, கவனக் குறைவு, குருட்டு மனப்பாடம்.

**தேர்வு பயத்தை நீக்க சில வழிகள் :**

நம்பிக்கை, முன்கூட்டியே படிக்க ஆரம்பித்தல், தைரியம், வழக்கமான செயல்கள், ஒய்வு, பழைய வினாத்தாள், உடற்பயிற்சி, அளவான உணவு, 6 மணி நேரம் தூக்கம்.

**தேர்வின் போது :**

அடித்தல், திருத்தல் இல்லாமல் எழுதுவது, தேவையான பதிலை மட்டும் எழுதுவது, கேள்வி எண் (எ.கா) (அ.5) போடுவது, தலைப்பு யிட்டு எழுதுவது, அடிககோடிடுவது என்பது தேர்வு தாள்களில் பண்ண வேண்டியவை.

**வகைப்படுத்துதல் :**

ஓர் இடத்தில் உள்ள அனைத்துப் பொருட்களையும் நாம் வகைப்படுத்தும்போது அவை நம் மனதில் நிலைத்து நிற்கும் எ.கா மரம் என்றவுடன் கிளை, இலை, பச்சை, நிறம் போன்றவை நம் நினைவுக்கு வரும்.

**முடிவுரை :**

தெளிவாகப் புரிந்துகொள்ளும் எதனையும் நம்மால் எளிதாக நினைவில் நிறத்த முடியும்.

**கவிதை :**

“நீங்கள் பறிக்க முயன்றுவிட்டால்,
உங்களுக்கு ரோஜா தான் தெரியும்
முட்கள் தெரியாது.”
”நீங்கள் எடுக்க முயன்றுவிட்டால்
உங்களுக்கு முத்துதான் தெரியும்
கடலின் ஆழாம் தெரியாது”
“நீ நடக்க முயன்றுவிட்டால்
உங்களுக்கு பாதைதான் தெரியும்
தடுக்கும் கற்கள் தெரியாது”
“நீங்கள் படிக்க முயன்றுவிட்டால்
உங்களுக்கு வெற்றி மட்டுமே தெரியும்
தோல்வி தெரியாது.



## பெண்மை...

பெண்மை என்றதும் வரும் நினைவோ பேரின்பமா...
இல்லை...
முழுவதும் முடிவடைய முரணான குமுரல்களே...
எதை கொண்டு ஈடு செய்ய...
இல்லை எதுவும் ஈடு செய்ய...
கடக்கும் ஒவ்வொரு நாளும் கனவுகளை சுமந்தும்
கண்ணுக்கு தெரியாத காளனின் எதிர்ப்பை எரித்தும்...
செல்கிறோம் ஒவ்வொரு நொடியும் எனக்கானதென்று
இவைகளை எதிர்கொள்ள முடியாது என்ற
என் குடும்பத்தின் யேச்சுக்களும்
என் காதில் இரும்பாணி இறக்கியது போல்
இருந்தது...
முற்றுப்புள்ளி இல்லாத பெண்களின் கனவுகளை
மூன்று முடிச்சிகளுக்குள் முடக்கிவிடுவதா...
கண்களில் இருந்து கனவுகள்கரைந்து
கண்ணீர் மொட்டுக்களாக உதிர்வதா...
பெண்களின் கனவுகளை உணர்ந்து
அம்மொட்டுக்களை உதிரவிடாமல் மலரவிடுங்கள்

**தெ. மகிஷா**
இளம்